உ.
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 30 | சாதாரண – மார்கழி - 10–1–71 | இதழ் 2

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே, – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

எம்பாவை வழங்கும் இன்னருள்

உடலுக்கு உயிர் துணையாவது போல உயிர்க்குத் துணையாகின்றவன் இறைவன். ஆனல், உயிர் உடலுக்குத் துணையாய் நிற்பது, முதலிலும், முடிவிலும் இல்லாமல், இடையில் சிறிது காலத்திற்கே. இறைவன் உயிர்க்குத் துணையாவதோ, தொடக்கக் காலம், முடிவுக் காலம் என்பன இல்லாமல், என்றென்றும் நிகழ்வது. எனினும் ஒருபுடை ஒற்றுமை நோக்கி, உயிர் உடலுக்குத் துணையாவது, உயிர்க்கு இறைவன் துணையாவதற்கு உவமையாகக் காட்டப்படுகின்றது. உயிர் உடலின் வேருயினும் வேருய் நில்லாது உடலே தானய் நின்று உடலுக்கு வேண்டுவனவற்றைச் செய்கின்றது. அது போலவே இறைவனும் உயிரின் வேருயினும் வேருய்

நில்லாது உயிரே தானாய் நின்று அதற்கு வேண்டுவனவற்றைச் செய்கின்றான்.

இறைவன் உயிர்கட்குச் செய்யும் செயல்கள் அனைத்தும், 'கட்டு, வீடு' என்னும் இருவகையுள் அடங்குவனவாம். அவற்றுள் கட்டாவது, உயிர்களை வினையுட்படுத்து அவ்வினைக்கீடான உடம்புகளைக் கொடுத்து, 'சுவர்க்கம், நரகம், பூமி' என்னும் உலகங்களில் உழல விடுத்து, இன்பம் துன்பம், மயக்கம் என்பவற்றை நுகரச்செய்தல். வீடாவது, அவ்வினைக் கட்டினை அறுத்து, அதனால் உழன்ற அலமரலை நீக்கித் தனது திருவடி நிழலில் என்றும் ஒரு பெற்றியாய் நின்று இன்புறச்செய்தல்.

கட்டும், வீடும் ஆகிய இருவகை நிலைகளில் நிற்கும் உயிர்கட்கும் அவை மேன்மேல் உயரும் வழியறிந்து அவ்வாற்றானே உயர்ந்து உய்தற்பொருட்டு, தானே நேராகவும், தனது திருவருளைப்பெற்ற சீராளர் வழியாகவும் பல நூல்களை ஆக்கி அளிக்கின்றான். அவற்றுள் கட்டுட்பட்டு நிற்கும் உயிர்களுக்கு வேண்டற்பாலனவற்றைக் கூறும் நூல்கள், 'உலகியல் நூல்கள்' எனவும், வீடுபெறும் உயிர்கட்கு வேண்டுவனவற்றைக் கூறும் நூல்கள், 'மெய்ந்நெறி நூல்கள்' எனவும் சொல்லப்படும். அவ் இருவகை நூல்களும் 'ஆய்வுநூல், அழகுநூல்' என்னும் இருவகையில் வெளிப்படும். ஆய்வு நூல்களை, 'சாத்திரம்' என்றும், அழகுநூல்களை, 'இலக்கியம்' என்றும் வழங்குவர். ஆய்வு நூல்கள் பேரறிவுடைய சிலர்க்கே இனியவாய், விளங்கிப் பயன் தரும். ஏனையோர்க்கு அவை பயன்தர மாட்டா. அதனால், பலர்க்குப் பயன்படுதல் கருதி அழகுநூல்களே பெரும்பான்மையாக ஆக்கி வழங்கப் படுகின்றன.

இன்னும், அழகுநூல்கள் அறிவளவில் நில்லாது அனுபவமாகவும் உணரப்படுதலால், அனுபவத்தின் வழி எழும் நூல்களும் அழகு நூல்களாகவே வெளிப்படுகின்றன. எனவே, உலகியல் அனுபவத்தின்வழி உலகியல் இலக்கியங்களும், இறை அனுபவத்தின்வழி மெய்ந்நெறி இலக்கியங்களும் தோன்றுவனவாகும். இவற்றுள் மெய்ந்நெறி இலக்கியங்களே திருமுறைகள். எனவே, இவற்றில் உலகியல் நோக்கு அமைதல் அரிது. எனினும் இதற்கு விலக்காக வாதவூரடி

கள் அருளிச்செய்த எட்டாந் திருமுறையுள் திருக்கோவை யார், மெய்ந்நெறியோடு உலகியலையும் உடன் நோக்கு கின்றது. இதனை, அதற்கு நல்லுரை வகுத்த 'பேராசிரியர்' என்பார், "அறிவன்நூற் பொருளும் உலகநூல் வழக்கும் என இருபொருளும் நுதலி எடுத்துக்கொண்டனர்" எனக் குறித்தார்.

இனி அத்திருமுறையுள் அவர் அருளிச்செய்த திருவாசக மாம் மற்றொரு பகுதி, எங்கும் பத்தி வெள்ளமே பரக்க நிற்பி னும், 'திரு எம்பாவை' என்பது ஒன்றும் மேற்கூறிய இரு பொருள் நோக்குடைத்தாகின்றது. அஃதாவது, ஓர்யாண் டில் வரும் பன்னிருதிங்களில் மார்கழித்திங்கள் முழுதும் மக்கள் கடவுள்நோன்புக் காலமாகக் கருதி நோன்பு நெறியில் நிற்பாராயினும், சிவபெருமானது பெருநாளாய் விளங்கும் திருவாதிரையை முன்னிட்ட பத்து நாட்களில் மிகச்சிறப்பாக நோன்பு நெறியில் நின்று, ஆதிரை நாளில், ஆடும் பெருமான் அருள் நடனம் கண்டு அனைத்தின்பமும் பெறுவராதலின், அந்நாட்களுக்குரிய அருள் இலக்கியமாக அனைவர்க்கும் பயன்படும் முறையில் ஒரு நூலை ஆக்கித் தருதல் அருள் நெறித் தலைவராகிய தமக்குக் கடனுதல் பற்றி அவர், அதனை அங்ஙனம் அருளிச்செய்தார்.

மார்கழி நோன்பு மக்கள் பலர்க்கும் பொதுவாயினும், மணமாகாத பெண்களுக்கு அதனைச் சிறப்பாகக் கூறுதல் பண்டுதொட்ட மரபே என்பது பரிபாடல் முதலியவற்றுல் அறியப்படும். அம்மரபு பற்றி, அடிகளும் அதனை அம்மகளிர்க் குரிய அருள் இலக்கியமாகவே ஆக்கி அளித்தருளினர். ஆயினும், இளையரும், முதியரும்ஆய ஆடவர், பெண்டிர் அனைவரும் அந்நாட்களில் அவ்வருட்டிருப்பாடலை ஓதிப் பயன்பெறுதல் கண்கூடு. அந்நூலை அடிகள் அருளிச்செய்த முறைதான் எத்துணை அழகிதாய் உள்ளது!

கன்னிமைப் பெண்கள் பலர் குழாங்கூடி நீர்த்துறைக்குச் சென்று நீராடி, உலக நலத்திற்காகவும், தம் நலத்திற்காகவும் இறைவனை வேண்டி வழுத்தி மீள்வதாகிய மார்கழி நோன் பின் மரபினை அடிநிலையாகக் கொண்டு, முதற்கண் துயி லெழுந்து செல்லும் மகளிர், எழாது உறங்குகின்றவர்களை எழுப்பும் நயமும், அவ்விடத்து அவர்கள் உரையாடலில்

காணப்படும் பலவகைச் சுவைகளும், அதன் பின்னர் அவர்கள் நீர்த்துறையை அடைந்து அதனை அம்மையும் அப்பனுமாகக் காணும்காட்சியும், அக்காட்சியால் மகிழ்வுற்று அவர்கள் அந் நீரில்மூழ்கிவிளையாடும் ஆடலும், அவ்விளையாட்டின்பொழுதும் அவர்கள் அவ்வம்மையப்பரை மறவாது பாடி, அந்நீரையே அருள்நீராக்கிக் குளிக்கின்ற திறமும், அங்ஙனம் மூழ்கி எழுந்தபின்னர் அனைவரும் ஒருங்கிருந்து அம்மையப்பரை உலக நலத்தின் பொருட்டு மழை வேண்டியும், தம் நலத்தின் பொருட்டு நல்ல கணவரை வேண்டியும் அன்போடு அகங் குழைந்து துதிக்கின்ற துதிகளுமாக அமைந்த அந்நூல், அனைவரையும், ஆடும் பெருமானது அருள்வெள்ளத்தில் உண்மையிலேயே ஆழ்த்திவிடுவதாகும் எவ்விடத்தும் திருஎம்பாவை எடுத்து வழங்குவது, இறைவனது எய்தற் கரிய இன்னருளேயாம்.

இறைவன் ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி; தேவர்க்கெல்லாம் தேவனும் மாதேவன்; அவனைப் பாடும் பாடலைக் கேளாத செவியும் செவியோ! அச்செவி, மூளையை அடித்தாலும் உள்ளே புகாத பாறைபோலும் வன் செவியல்லவோ!' அவ் இறைவனிடத்தில் பேரன்புடையோம் என்று எப்பொழுதும் வாய்ப் பறை சாற்றிக்கொண்டு, மார்கழி மாதத்தில்விடியற்காலையில் படுக்கையின்மேல் அன்புவைத்துக் கிடக்கின்றவர்களை நாம் என்ன சொல்வது! அவர்கள் தாங்களே எழாததோடு எழுப்புபவர்களையும், சீசீ எனவைகின் றார்கள். அவர்களை நாம் என்ன சொல்வது! இறைவனைச் சில வேளைகளில் மட்டும். 'என் அத்தன் ஆனந்தன் அமுதன்' என்று உள்ளம் உருகித் தித்திக்கப் பேசினல் போதுமோ! எப் பொழுதும் அந்நிலையில் சோராது இருக்கவேண்டாவோ! தாமாக விடியலில் விழித்தெழாவிடினும் சிலர் வந்து எழுப்பும் பொழுதேனும் எழுந்து வாராமல், 'அவர்கள் வந்தார்களா, இவர்கள் வந்தார்களா' என்று கேட்டுக்கொண்டு தூங்கிக் காலத்தைக் கழிக்கலாமோ! 'கடவுளையும் எமது தவத்தால் கட்டுப்படுத்தி விடுவோம்' என்று வாய்வன்மை பேசி நோன்புக்குரிய விடியற்காலையில் பலர் திரண்டு சென்று ஓலமிட்டாலும் கண்விழியாது உறங்குபவரை என்ன சொல்வது! விடியலில் எழவேண்டும் என்று ஒவ்வொருநாளும் உறுதி பூண்டு, மறுநாள் விடியற்காலையில் அதைச் செயலில்

காட்ட முடியாமல் உறக்கத்தில் ஆழ்ந்து விடுகின்றவர்களிடத்தில் இரக்கந்தான் கொள்ளவேண்டியிருக்கிறது! உண்மையிலே சோர்வில்லாத அன்புடையவர்களையும் உறக்கம் என்றுவது ஒருநாள் தன்னுள் ஆழ்த்திவிடுகின்றது. அவர்களை அவ்வமையம் எழுப்பி உதவுவது ஏனையோர்க்குக் கடமையே. சிலர், 'சிவபெருமானுக்குத் திருமால் முதல் அடியவராக இருப்பது, அவர் படுக்கையினின்றும் எழாதிருப்பதால்தான்' என்று நினைத்துத் தாங்களும் அவ்வாறு இருந்து விடுகின்றார்கள். அவர்களுக்கு, 'திருமால் முறைப்படி எழுந்து நீராடிக் கண்ணையும் பறித்துப் பூவாகச் சாத்தி பூசை செய்ததனுல் தான் முதல் அடியவர் ஆனுர்' என்று அறிவுரை கூறவேண்டியுள்ளது என்ற இவற்றையெல்லாம் முதலில் திருவெம்பாவை விளக்குகின்றது.

இப்படியெல்லாம் நல்லோர்சிலர் ஏனைப்பலரையும் அவரவருக்கு ஏற்றவகையில் சொல்லி எழுப்புகின்றவர்கள். அவ்வாறு எழுப்பும் பொழுதும், பின்பும் இறைவனைப் பற்றி எப்படி எப்படிச் சொல்லித் தங்கள் அன்பை வெளிப்படுத்துகின்றுர்கள்!

'விண்ணுக்கொரு மருந்து, வேதவிழுப்பொருள், கண்ணுக்கினியான். மால் அறியா மலை, நான்முகனும் காணுமலை, வானவராலும், மண்ணவராலும் பிறராலும் அறிதற்கரியவன். ஆயினும், எங்களைத் தானே வந்து ஆட்கொண்டு தலையளி செய்பவன், எம் ஆனை, எம் அரசன், ஒப்பில் பரஞ்சோதி. முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம்பொருள், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியன், அவன் பாதமலர் பாதாளம் ஏழிற்கும் கீழே உள்ளது. திருமுடிஎல்லை சொல்லைக் கடந்தது. ஓர் உடம்பிலே ஒருபாதி பெண்வடிவாய் இருப்பவன் வேதமுதல்வன். அடியார் உள்ளத்தையே கோயிலாகக் கொண்டவன்' அவனுக்கு ஓர் ஊரில்லை. பேரில்லை, அவனுக்கு சிலர்உறவினர்என்பதும், அயலார்என்பதும் இல்லை, நீறுபூத்த நெருப்புப்போலத் திருநீற்றைப் பூசியுள்ள சிவந்த மேனியன். துன்பக் கடலில் வீழ்ந்து கிடப்பவரை இன்பக் கரையில் ஏற்றுவதே அவனுக்கு விளையாட்டு, அவ் விளையாட்டினுல் எத்துணைப்பேர் எத்துணை வகையான நன்மைகளை அடைந்தனர், அவன் நம்பிறவியாகிய கோடை தணிய நாம் சென்று

மூழ்கத் தக்க தீர்த்தம், உலகம் முழுவதையும் படைப்பதும், காப்பதும், அழிப்பதும், அவனுக்குப் பெரிய செயலல்ல; அவனுக்கு அவை ஒரு விளையாட்டு. அவனே உலகிற்கு ஆதியும் அந்தமும், திருமால்பிரமன் முதலிய தவர்களிடத்தும் இல்லாத பெருவாழ்வு நமக்குக் கிடைக்குமாறு அவன்தானே நம் வீடு தோறும் எழுந்தருளி வருகின்றான். உலகில் உள்ள பெண் ஆண் அலிப் பிறப்புக்களும், விண் மண் முதலிய எல்லாப் பொருளும் அவனே என்றாலும், அவன் இவற்றுள் ஒன்றும் அல்லன், ஆயினும் அவன் நம் கண்ணால் பருகக்கூடிய அமுதமாக வந்து காட்சி யளிக்கின்றான்'

என்று இப்படி எல்லாம் பாடிக்களிக்கின்ற அப்பெண்கள், அவனை வேண்டும் வரமெல்லாம், 'தங்களுக்கு வாய்க்கின்ற கணவன் இறையன்பு குறையாதவனாக இருக்க வேண்டும்' என்பதே. 'இறையன்பில்லாத கணவனுக்கு வாழ்க்கைப் படுவதாயிருந்தால், அதைவிட நாங்கள் கன்னியராகவே யிருந்து காலம் கழித்து விடுகின்றோம்' என்கின்றனர் அச்சிறு முதுக்குறைவியர். அதன் பொருட்டு அவர்கள் உலகிற்கு ஆதியாயும், அந்தமாயும், ஐந்தொழில் செய்வனவாயும் உள்ள இறைவனது திருவடி மலர்களைப் பல்லாற்றானும் 'போற்றி போற்றி என்று சொல்லி வணங்குகிறார்கள். இச்சிறுமியரது செயலைப் பார்த்தேனும் நாம் சிவபெருமானது திருவடிகளில் பத்திசெய்தற்கு அமைந்தவை திருவெம்பாவைத் திருநாட்கள். இந்நாளில் ஓதப்பெறும் திரு எம்பாவை சிறுமியரது செயலையோ தெரிவிக்கின்றது! இறைவனது இன்னருளையன்றோ அள்ளி வழங்குகின்றது! அதனைப் பெறுதற்கு அமைந்ததே மார்கழி நீராட்டு. அதற்கு வாய்ப்பாகத் தருமையாதீனத் திற்குச் சொந்தமான திருக்கோயில்கள் பலவற்றிலும் இம் மார்கழித்திங்களில் பாவை மாநாடுகள் நடைபெறத் திருவுளம் பாலித்தருளும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமாமணி அவர்களது திருவுளக் கருணையை நினைந்து போற்றி, மற்றும் எவ் விடத்தும் பாவை விழாவிற் கலந்து பாடி எம்பாவை வழங்கும் இன்னருளைப் பெற்று நலம் பெறுவோமாக.

உ
குருபாதம்

குருவருள்

தோத்திரமும் சாத்திரமும்

மதியணி வள்ளல்

உயிர்களின்பொருட்டு உலகத்தைப் படைத்த இறைவன் உயிர்கட்கு அவ்வுலகம் பயன்படுதற்பொருட்டு ஒளிப்பொருள்கள் பலவற்றைப் படைத்தான். ஒளி இல்லையேல், உலகம் உளதாயினும் உயிர்கள் அதனல் பயன் கொள்ளுதல் இயலாது.

ஒளிப்பொருள் ஐம்பூதங்களில், 'தேயு' என்னும் நெருப்பின் கூறுகும். வடமொழியில் 'தேஜஸ்' என்று சொல்லப்படுவதே, தமிழில் 'தேயு' என்று சொல்லப்படுகின்றது. 'தேஜஸ்' என்பதற்கு 'ஒளி' என்பதே பொருள். நெருப்பின் குணத்தையும், நெருப்பின் மூல காரணத்தையும் வடநூல்கள். 'ரூபம்' என்றே கூறினுலும், தமிழ்நூல்கள் அவற்றை, 'ஒளி' என்றே கூறுகின்றன. இவற்ருல், 'ஒளிகள் யாவும் நெருப்பின் கூறு' என்பது விளங்கும்,

புறத்தில் ஒளியும், இருளும்போல், அகத்தில் உள்ளவை ஞானமும், அஞ்ஞானமும். அதனல் ஞானமே உருவாய் உள்ள இறைவன் ஒளிவடிவினனுகின்ருன். ஆகவே, ஐம்பூதங்களில் நெருப்பே அவனுக்குச் சிறந்த வடிவமாகின்றது.

" பொங்கழல் உருவன் பூதநாயகன் " (சம்பந்தர்)

" எரியலால் உருவ மில்லை " (அப்பர்)

" தழல்போலுந் திருமேனி " (சுந்தரர்)

" ஆரழல்போற் செய்யா " (அப்பர்)

" தீக்கனல் மேனியானே " (சேக்கிழார்)

என்றூற்போலும் திருமொழிகளால், நெருப்பே இறைவனுக்குச் சிறந்த வடிவமாதல் விளங்கும்.

நெருப்பின் கூருய் வானத்திற் காணப்படும் ஒளிப்பொருள் களை, 'மீன்' எனவும், 'கோள்' எனவும் இருவகையாகக் கூறுவர். மீன்கள் தாமே ஒளியுடையன; கோள்கள் மீன் களிடமிருந்து ஒளியைப் பெற்றுத் திகழ்வன. மின்னுவது மீன். கொள்ளுவது கோள். ஞாயிறு மீனேயாயினும், அதன் ஒளியே நமக்குப் பயன்தருதலால், அதனை வேறு பிரித்து, மற்றைய கோள்களின் இயக்கத்தைக் கணக்கிடுதற்கு உதவி யாக அதனையும் ஒருகோளாக வைத்து எண்ணினர் நம்முன் னோர். கோளல்லாத இராகு கேதுக்களைக் கோளாக வைத்து எண்ணியதும் சில கணக்கு முறைக்கு உதவவேண்டியே யாம்.

இங்ஙனம் இயற்கையாகவும், செயற்கையாகவும் திகழும் ஒளிப்பொருள்களில் சிறப்புடையது ஞாயிறே (சூரியனே) என்பது யாவரும் அறிந்தது. அதற்கு அடுத்த நிலையில் விளங்குவது திங்கள் (சந்திரன்). ஞாயிற்றின் ஒளி, வெப்பத் தொடு கூடியது. அதனால் ஞாயிற்றிற்கு 'வெங்கதிர்' என்ற ஒரு பெயரும் உண்டு. ஞாயிற்றின் ஒளியும், வெப்பமுமே உலகம் நிலைபெற்றிருத்தற்குப் பெரிதும் காரணமாகும். அதனை அறிந்தே எல்லா மக்களும் ஞாயிற்றை வணக்கத்திற்கு உரிய பொருளாக வைத்துப் போற்றுகின்றனர்.

"உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு"

என்று நக்கீரர் ஞாயிற்றை, "பலர்புகழ் ஞாயிறு" எனச் சிறப்பிக்கின்றூர். சிவபெருமானது மூன்று கண்களில் ஞாயிறு வலக்கண்ணுகச் சொல்லப்படுகின்றது.

ஞாயிறு இத்துணைச் சிறப்புடையதாயினும் மக்கள் அதனை இன்பப் பொருளாகக் கருதுவதில்லை. திங்களையே இன்பப் பொருளாகக் கருதுகின்றனர். அதற்குக் காரணம் அதனது ஒளி, வெம்மையின்றித் தண்மையாய் இருத்தலே. தண்மை யான ஒளியுடையதாய் இருத்தல்பற்றித் திங்களை, 'தண்கதிர்'

என வழங்குவர். இத்தட்பம் பற்றி அதன் ஒளி, 'அமுத கிரணம்' எனவும், 'அதனைத் தேவர்கள் நாள்தோறும் சிறிது சிறிதாகப் புசித்துவிடுவதனுலேயே அது சிறிது சிறிதாகத் தேய்ந்துகொண்டேபோய் இறுதியில் இல்லாமல் போய்விடுகின்றது' எனவும், 'அதன்பின் தேவர்களும் அறியாதவாறு நுண்ணிதாய் நின்ற ஒரு கூற்றிலிருந்து மீண்டும் அது சிறிது சிறிதாய் வளர்கின்றது' எனவும் கூறுவர். இவற்றிற்கெல்லாம் காரணம், சந்திரனது ஒளியில் மக்கட்குஉள்ள விருப்பமே.

இவ்வகையில் யோகநிலையில் வாயுப் பயிற்சியால் நெற்றி நடுவிலிருந்து ஊறி நாடிகளில் பாய்ந்து உடலைக் கெடாது நெடுங்காலம் நிலைபெறச் செய்யும் ஒருவகைச் சாற்றுப் பொருளையும் 'அமுத தாரை' எனவும், 'அதனைத் தருவது நெற்றி நடுவில் உள்ள சந்திர மண்டலம்' எனவும் கூறுவர். இத்தகைய மரபுகளை உடைய சந்திரன் சிவபெருமானது மூன்று கண்களில் இடக்கண்ணுயிருப்பதுடன், அவரது திருமுடியிலும் இடம் பெற்று விளங்குகின்ருன்.

சிவபெருமானது திருமுடியில் விளங்கும் சந்திரன், வளர்ந்து நிறைவு பெற்றவனுயில்லாமல், முதற்கண் தோன்றும் மூன்ரும் பிறையாகவே இருக்கின்ருன். இம் மூன்ரும் பிறை சிவபெருமானது சிவந்த சடைமுடியில் விளங்குவது, இயற்கையில் மூன்ரும் பிறை அந்திச் செவ்வானத்தில் விளங்குவதுபோலவே காட்சியளிப்பதாகும்.

" நின், வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றுள
நின், தண்மையும் சாயலும் திங்கள்உள "

என்று பரிபாடல் கூறுவதுபோல, 'சிவபெருமானது சடையும், பிறையும் அந்திவானத்து உள' என்று கூறலாம் போலும்! இரவில் முழுநிலா ஒளிவீசி நிற்பது பலர்க்கும் மிக்க இன்பந்தருவதேயாயினும், அந்திக் காலத்தில் செவ்வானத்திடையே சிறிதாய், வெள்ளிதாய், கீற்றுப்போலத் தோன்றுகின்ற மூன்ரும் பிறையினது காட்சி தனித்ததோர் இன்பத்தைத் தருவதே. முழுநிலாவினும், மூன்ரும் பிறைக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. அஃதாவது, முழுநிலா மறுவுடையதாக, மூன்ரும் பிறை மறுவின்றித் தூயதாய் விளங்குவது

ஞாயிறுபோலத் திங்களும் வணங்கப்படுதல், அது மூன்றும் பிறையாய்த் தோன்றும் பொழுதேயாம். "தொழுதுகாண் பிறை" என்ற குறுந்தொகைத் தொடர் (178) பிறை, தொழு தற்குரியதாதலை விளக்கும். 'பிறைதொழுகென்றல்' என்ற ஒரு துறையே அகப்பொருளில் உண்டு. 'மறுவின்றி விளங் குதல் பற்றியே மூன்றும் பிறை தொழப்படுகின்றது' என்பர்.

"குடமுதல் தோன்றிய தொன்றுதொழு பிறையின்
வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றம்;
குணமுதல் தோன்றிய ஆரிருள் மதியின்
தேய்வன கெடுகநின் தெவ்வர் ஆக்கம்"

(மதுரைக்காஞ்சி)

என வளர்ச்சிக்குப் பிறையையும், தேய்விற்கு நிறைமதியை யும் உவமை கூறிய மாங்குடி மருதனார், அவற்றை முறையே, 'தோன்று தொழுபிறை' எனவும், 'ஆரிருள் மதி' எனவும் குறித்த நுட்பம் கருதற்பாலது. இதனால், 'மறுவின்மை வளர்ச்சியையும், மறுவுடைமை தேய்வையும் தரும்' என்பது விளங்கும்

வானத்தில் தோன்றுகின்ற மூன்றும் பிறை ஒருநாள், ஒருபொழுது மக்களால் வணங்கப்படுகின்றது. ஆனால், சிவபெருமானது திருமுடியில் விளங்கும் பிறை எந்நாளும், எப்பொழுதும், யாவராலும் வணங்கப்படுகின்றது. அதற்குக் காரணம், அஃது அப்பெருமானிடத்தில் விளங்கி, என்றும் ஒருபெற்றியாய் இருத்தலேயாம்.

"பிறை, நுதல்வண்ணம் ஆகின்று; அப்பிறை
பதினெண் கணனும் ஏத்தவும் படுமே"

என்றது புறநானூற்றுக் கடவுள் வாழ்த்து. இதனால் 'சிவபெருமானை அடைந்தோர் என்றும் ஒருபெற்றியராய்ப் பலரும் வணங்க வாழ்வார்' என்பது அறியப்படும்.

இவ்வாற்றால் சிவபெருமானது சிவந்த சடையில் மறு வின்றி விளங்கும் வெள்ளிதாகிய பிறை அன்பர் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளுந் தகையதாகும். அதனையே சீகாழியில்

சிவபெருமானல் உள்ளம் கவரப்பட்ட ஒரு தலைவி கூற்ருக ஞானசம்பந்தர் தமது நிலையை விளக்கிய திருப்பாடலில்,

> " தோடுடைய செவியன், விடையேறி, ஓர்
> தூவெண் மதிசூடி "

என்று அருளிச்செய்தார்.

சிவபெருமான் சந்திரனைச் சடையில் தரித்தது, 'அவன் தக்கனது சாபத்தால் தேய்ந்து அழிந்தொழியும் நிலையில் வந்து சரண் அடைந்தபொழுது அவனுக்கு அபயந் தந்து அவன் அழியாதவாறு காத்தற்பொருட்டு நிகழ்ந்தது' எனக் கந்த புராணம் கூறும். அதனல் பிறையணிந்தமை அப் பெருமானது, அஞ்சினவர்க்கு அருள்புரி செயலாகிய வள்ளல் தன்மையைக் காட்டுவதாகும். ஆகவே, அவனை மதிமுடி வள்ளலாகத் திருமுறைகள் பல இடங்களில் எடுத்தோதிப் புகழ்தல் காணலாம்.

மதியினது கூறுகள், 'கலை' எனப்படும். அதனல், சிவபெருமான் அணிந்த வெள்ளிய சந்திரகலை ஞானக்கலை வடிவாகவும் திகழ்கின்றது. யோகநிலையில் மேற்கூறியவாறு சந்திர மண்டலத்தில் உள்ள அமுத தாரையைப் பெறும் முறைமை சிறந்தெடுத்துப் பேசப்படுதலால், சிவபெருமானது நெற்றியில் விளங்கும் பிறை, அப்பெருமான் யோகியர்க்கு அவர்தம் தியானப் பொருளாக விளங்குவதையும், அவனே ஒரு சிறந்த யோகியாய் நிற்றலையும் தெரிவிப்பதாகும். சிவ பெருமானை அடைந்துநிற்கும் சந்திரனது கலைகள், 'பதினறு' எனப்படுவதால், அவை சோடச கலாப் பிராசாத நெறியில் சிவமாந் தன்மைப் பெருவாழ்வு பெறுதலையும் விளக்குவதாம்.

இன்னும் 'இயல்பாகச் சந்திரனுக்குப் பாம்பு பகை' என்பர். ஆயினும், சிவபெருமானது திருமுடியில் அவை இரண்டும் நட்புக்கொண்டு வாழ்கின்றன. இதனைத் திருமுறை கள் பல இடங்களில் வியந்து பேசும். இது சிவனருள் வாய்க்கப் பெற்ருர்க்குப் பகையுள்ளம் நீங்குதலைக் காட்டும். திருமூலர், 'சிவபெருமானது திருமுடியில் உள்ள பாம்பு குண்டலி சத்தி' எனவும் 'சந்திரன் யோகத்தில் காணும்

சந்திரமண்டலம்' எனவும் கொள்ளத்தக்க குறிப்பைஉணர்த்துகின்றார்.

பாம்பு மதியைத் தினலுறும் பாம்பினைத்
தீங்கு கதிரையும் சோதித்து அனலுறும்
பாம்பும் மதியும் பகைதீர்த் துடன்கொள்ளின்,
நீங்கல் கொடானே நெடுந்தகை யானே.

இவ்வாறு தோத்திரங்களின் உட்பொருளை உணர்தற்குச் சாத்திர உணர்வு வேண்டத்தக்கதாதலை மக்கள் உணர்ந்து பயன்பெறுவார்களாக.

சொக்கநாத வெண்பா

ஆடரவஞ் சூழ்மதுரை அம்மானே அன்பருடன்
கூடவிளை யாடிவருங் கோமானே — நீடுபுகழ்
மென்மேலும என்தனக்கு மேவியிடப் பொல்லாத
என்மேல் வினைகெடுப்பா யே. 1

புண்கட்டு தோலைப் புதுக்கி மயக்கமுறக்
கண்கட்டு வித்தைபோல் காட்டுவாய் — பண்கட்டுப்
பூணுவேன் தன்னை இன்ப பூரணத்தில் பூண அருள்
தாணுவே சொக்கநா தா. 2

ஏடாரும் நாரியரை ஐயோ யமன்பிடிக்கும்
பாடா விதியென்று பாராமல் — கேடாரப்
பூண்டஆ பாதன்என் று போடா தெனையருளில்
ஆண்டவா சொக்கநா தா. 9

காக்கைநரி ஞாளி கழுகுபருந் துக்கிரையாம்
ஆக்கையினை யானென் றலையாமல் — வாக்குமனம்
எட்டாத வீட்டில் எனைக்காட்டு துட்டருளம்
தட்டாத சொக்கநா தா. 4

— ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக சுவாமிகள்.

ஆலய வழிபாடு பற்றி –
– அண்ணல் காந்தியடிகள்

பல ஹிந்துக் கோவில்களிலும், கிறிஸ்தவக் கோவில்களிலும், மசூதிகளிலும் மோசமும் திருட்டும் நடைபெறலாம். புனிதம் குறைந்துபோய்க் குற்றம் மிகுந்திருக்கலாம். ஆயினும் பூஜை செய்யும் குருக்கள்மார்கள் அனைவரும் கெட்டவர்கள் என்று சொல்லவும் முடியாது. எல்லாக் கோயில்களுமே கெட்டுப் போயின என்றும் சொல்லமுடியாது. எந்தச் சமயத்துக்கும் ஒரு கோவில் அவசியமாகிறது. கோவிலில்லாமல் சமயம் இருக்கமுடியாது. சமயம் தோன்றியதும் அதற்கென்று ஒரு கோயில் தோன்றவே தோன்றும். இது ஒரு தவிர்க்க முடியாத இயற்கை விதி.

ஆண்டவனுக்கு இந்த மனித உடலே ஒரு கோவில் என்பார்கள் அல்லவா? அப்படிச் சொல்வதில் தவறு ஒன்றுமில்லை. ஆயினும் தோலும் சதையும் கொண்ட அந்தக் கோவில்கள் எத்தனையோ பாபமும் குற்றமும் நிறைந்த கோவில்களாக இருக்கின்றன! அந்தக் கோவில்களையெல்லாம் இடித்து அழித்துவிட ஒப்புவோமா? சிலரேனும் நல்லவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் இதயத்தில் ஆண்டவன் கோவில்கொண்டிருக்கிறான் என்பது நமக்குப் போதுமல்லவா? சதையும் தோலும் போர்த்திய உடல்களாகிய இந்தக் கோவில்களைப் போலவே கல்லும் சுண்ணும்பும் போட்டுக் கட்டிய பல கோவில்களும் கெட்டுத்தான் போயிருக்கின்றன. அவை தோன்றியது நன்மைக்காகவே. ஆனால் மனிதனுக்குள்ள குறைகளினால் கெட்டுப்போகின்றன. இதற்காகக் கோவில்களே வேண்டாம் என்று சொல்வதற்கில்லை.

ஏதேனும் ஓர் இடத்தைப் புனிதமாகக் கருதிக் கோவில் என்றோ மடம் என்றோ வைத்துக்கொண்டுதான் எல்லா மதங்களும் சம்பிரதாயங்களும் உலகத்தில் நடைபெற்றுவருகின்றன. அப்படியல்லாத எந்தச் சம்பிரதாயத்தையும் நான் கண்டதில்லை. மக்களைத் திருத்துவதற்காகத் தோன்றிய பெரியோர்கள், மகாத்மாக்கள், அவதார புருஷர்கள் அனைவருமே தம்

மைச் சேர்ந்த மக்கள் வைத்துக்கொண்டிருந்த கோவில்களை இடித்ததில்லை; விட்டுவிட்டதுமில்லை. சீர்திருத்தம் செய்யத் தான் பார்த்தார்கள். அழித்துவிட முயலவில்லை. கோவில் களிலேயே நின்று உபதேசம் செய்திருக்கிறார்கள்.

நான் பல ஆண்டுகளாகக் கோவில்களுக்குப் போன தில்லை. அதனால் நான் உயர்ந்தவனாகிவிடவில்லை. என்னைப் பெற்ற தாய் உடல் நோயால் பாதிக்கப்பட்டுத் தடைப்பட்ட சமயம் தவிர, எப்போதுமே கோவிலுக்குப்போய் வந்தாள். கோவிலுக்குப்போகாத என்னைவிட அவளுடைய தெய்வ பக்தியே மிகச் சிறந்தது. இதில் சந்தேகமே இல்லை. அதைப் போலவே லட்சக் கணக்கான மக்களுடைய தெய்வ பக்தியானது கோவில்களாலும், மசூதிகளாலும் உருவம்கொண்டு காக்கப்பட்டு வருகிறது. அவர்கள் மூடர்கள் அல்ல. மூர்க் கர்கள் அல்ல. குருட்டுப் பக்தர்களும் அல்ல. அறியாமையும் மூர்க்கத்தனமும் எல்லா மக்களுக்கும் பொது. அந்தக் குறை சம்பிரதாய சமய முறைகளினால் உண்டானதல்ல. அது நம் முடைய உள்ளத்திலுள்ள குற்றத்தினால் உண்டான குறை. எந்தச் சம்பிரதாயத்தைக் கொண்டிருந்தாலும் ஒன்றே.

ஹரிஜன் - 11—3—33.

கல்கி - 11—10—70.

கோயிலில்லாவூர்

திருச்சிற்றம்பலம்

திருக்கோயி லில்லாத திருவி லூரும்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்
அவை யெல்லாம் ஊரல்ல அடவிகாடே.

திருச்சிற்றம்பலம் —அப்பர்.

" கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் "

வித்துவான். திருமதி. ப. நீலா

(மலர் 30, இதழ் 1, பக்கம் 20 இன் தொடர்ச்சி)

37. சோழனை மடுவில் வீழ்த்தியது.

பூங்கொன்றை வேணியர் பொன்னனையாளுக்காக இரச வாதம் செய்தமை அறிந்தோம். இப்பொழுது ஆத்தியணிந்த சோழவரசனை மடுவில் தள்ளித் தென்னனை அமரிற்காத்த செயலை அறிவாம்.

இராசேந்திர பாண்டியன் இந்திராதி தேவர்கள் தொழ விண்ணுலகடைந்தபின் அவன் மகன் இராசேசன் அரசுப் பொறை தாங்கினான். பின் இராசகம்பீரனும், பாண்டி வங்கிய தீபனும், புரந்தரசித்தும், பாண்டி வங்கிய பதாகனும், சுந்தரேசபாத சேகரனும் ஆகிய இவர்கள் ஒருவர்பின் ஒருவராய்ப் பாண்டிநாட்டை ஆண்டனர்.

பயிரெனப் பாதுகாக்கிறான் :

இவர்களுள் சுந்தரேசபாதசேகரன் அலைபுனலுடுத்த கூடல்மாநகர்க் கதிபனாகி அழகிய சொக்கநாதருக்கு அன்பனாகி கொலைபுணர் வேலினால் குறும்பெனும் களைகள் நீக்கி மலர் தலை உலகமென்னும் வான்பயிரை நெறியோடு காத்தோம்பி வருகிறான். தன் படைகளுக்காகக் குறிப்பிட்ட அளவே செலவுசெய்து எஞ்சிய பொருள்களையெல்லாம் சிவபெருமானுக்கே செலவாக்கும் செம்மை நலம் பெற்று விளங்குகிறான். பத்துத் தேரும், நூறுயானையும், ஆயிரங் குதிரையும், பதினாயிரம் காலாளுமாகிய இவ்வளவே அவன் படை. வரும் ஆற்றைப் பெருக்கிச் செலவாற்றைச் சுருக்கிப் பல புதிய அணிகளை, கோயில் திருப்பணிகளை மதுரைப் பெருமானுக்காகச்செய்தான்.

மூண்டது சோழன் பகை :

பாண்டியனது படைபலக் குறையை உணர்ந்த சோழன் 'ஆயிரம் பரிக்கோர் சேவகன்' - என்போன் வஞ்சிசூடிப் போர் முரசு கொட்டி வருகிறன். கடல் பொங்கி வருவதுபோல் விரைந்து வரும் வளவனின் சேனையைக் கண்டு பாண்டியன் என்றும் தங்கள் இடுக்கண் தீர்க்கும் சோமசுந்தரப்பெருமானிடம் விண்ணப்பம் செய்கிறன்.

பொற்சடையணிந்த புனிதனே 'உனது ஆசியின் பலத்தால் நாடாளும் அடியேனது படைபலக் குறையுணர்ந்து பகைத்தெழுந்து வருகிறன் சோழன். காவிரிநாடனின் சேனையோ கடல்போல் ஆர்ப்பரித்து அருகில் வந்துவிட்டது. என்னல் என்ன செய்யமுடியும். உன் திருவடித் துணையில்லாமல்' என்று பணிந்திரக்கப் 'பூவிரி வாகை நீ புனைய நாமே பொருவோம் - கவலற்க' என்ற பெருமான் வாக்கு விண்ணில் கேட்டது.

வேட வடிவெடுத்த வித்தகன் :

கதிரவனைக் கண்டு மலரும் கமல மலர்போல காவலனின் முகம் மலர்ந்தது. செஞ்சடைப் பிரானின் திருவடிகளை நெஞ்சில் பதித்துப் பல வாத்தியங்களும் முழங்க சோழனது சேனைக் கடல் நடுவண் குதிரையோடு புகுந்தான் பாண்டியன். பொன்னி நாடனின் சேனைகளுக்கெல்லாம் இவன் சேனை ஒரு பெரிய கடல்போலே கண்களுக்குத் தெரிந்தது. மேருவை வில்லாகவும், வாசுகியை நாணகவும் பூட்டி திருமாலை அம்பாகக் கொண்டு கனலெரியைத் தன்வாய்ப் புன்னகையால் தோற்றுவித்த சிவபெருமான் வேட வடிவங்கொண்டு பாண்டியன் சேனை நடுவுள் நின்றார்.

இருளில் எழுந்த மதிபோல் காதில் தந்தத் தோடும், இருளில் முளைத்த விண்மீன்கள்போல் மயில் தோகை சூடிய சிகையும் கொண்ட வேடன்; கழுத்திலுள்ள கருமை உடல் முழுமையும் பரந்தாற்போலக் கருத்த மேனியோடு கொல் வேலேந்திக் காவிரிநாடன் காண நின்றான். ஆயிரம் பரிக்கோர் சேவகனுகிய நான் இதோ வந்தேன் என்று சோழன்

எதிர்த்துவர எண்ணற்ற குதிரைகளுக்குச் சேவகன் நானே என்று வேடனும் மார்தட்டி முன்னேற – படைகள் வேடனின் ஆற்றலும் தோற்றமும் கண்டு நடுநடுங்கி ஒடுங்கி ஓடின. வளவனும் குதிரையொடு புறங்காட்டி ஓடினன். அவன் ஓடுவதைக்கண்ட பின்பு வேடனின் திருவுருமறைய பாண்டியன் வளவன் பின்னே விரைந்து விரட்டினன். சிறிது தொலைவில் அவன் திரும்பிப் பார்க்க வேடனைக் காணவில்லை. பாண்டியனை ஆவேசத்தோடு மதுரை வரையிலும் விரட்டிக் கொண்டு வந்தான் சோழன்.

மடுவில் வீழ்ந்த மன்னவன் :

காற்றால் முடுக்கப்பட்ட கனல்போல் சோழனால் துரத்தப் பட்டு ஓடிவரும் மாறன் மதுரைக்கருகில் இருந்த மடுவொன் றில் மயங்கிய யானையைப்போல் விழுந்தான். அந்த மேற்றிசைக் கிடங்கைக் கவனியாது நெருங்கிவந்த சோழனும் அவனுடன் அதனுள் விழுந்தான். ஆனால் கூடற்கோமான் அருளால் பாண்டியன் பாற்கடலிலிருந்து வெளிவந்த மதவெங்களிறென அம்மடுவினின்றும் கரையேறி வந்தான். கோழி வேந்தன் அம்மடுவில் ஆழ்ந்து போனான்.

இறந்துபட்ட வேந்தனின் ஆடை, அணிகலன்கள், நால்வகைப் படைகளையுங் கைப்பற்றிய வேம்பலர்தாரான் தகுந்தவற்றைப் பரிசாகப் பெருமானுக்களித்து அணிவித்து அளவிறந்த அன்போடு அவனடி பற்றி நெடுங்காலம் அரசாண்டான்.

(வளரும்)

திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே; வளருதியே வன்செவியே நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதேஎந் தோழி பரிசேலோர் எம்பாவாய்.

திருச்சிற்றம்பலம் — மாணிக்கவாசகர்.

திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

மூலமும் – உரையும்

உரையாசிரியர் :-

பண்டித வித்துவான், தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை

(மலர் 30, இதழ் 1, பக்கம் 24 இன் தொடர்ச்சி)

திருமுருகப்பெருமான் துதி

(அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்)

வண்டருு மருமலிபூந் தண்டலைசூ ழையாறன்
மலர்த்தாள் போற்றக்
கண்டகா சுரர்குழுவை வென்றமரர் மான்குறமான்
காந்த னாகித்
தொண்டர்போற் றிடநடன மிடுகதிர்பைந் தோகைமிசை
தோன்றுஞ் செவ்வி
கொண்டவேற் கிறைவிருபொற் சரண்முடி மீதுள
மகிழ்வு கூர்ந்துகொள்வாம்.

(இ - ன்) வண்டு அரு(த) மருமலி பூ தண்டலை சூழ் – (தேன் இடையறுதொழுகலால்) வண்டுகளானவை எக்காலத்து நீங்காது மொய்த்திருக்கு மணநிறைந்த பூக்களையுடைய சோலைகள் சூழ்ந்துள்ள, ஐயாறன் மலர்தாள் போற்ற- திருவையாற்றெம்பெருமான் மலராகிய திருவடிகளை இவ்வந்தாதியெனும் நூல்கொண்டு இடையீடின்றி யருச்சித்துத் துதிப்ப, கண்டக அசுரர் குழுவைவென்று – கொடியவர்களாகிய அசுரர் கூட்டத்தினை யழித்தொழித்து வெற்றிபூண்டு, அமரர் மான் - தேவேந்திரன் திருமகளாகிய தெய்வயானையம்மையாரையும், குறவர்மான் - நம்பிராசனுகிய வேடர்குலத் தலைவன் மகளாம் வள்ளிநாயகியாரையும் திருமணம் புரிந்து அவர்களை கிரியாசத்தியும் இச்சாசத்தியுமாகக்கொண்டு அவர்கட்குரிய தலைவனுகி, தொண்டர் போற்றிட – அகத்தியர், நக்கீரதேவர் முதலிய மெய்யடியார்கள் துதிப்ப, நடனம் இரு கதிர்பைந்தோகைமிசை - நர்த்தனம் புரியும் ஒளிபொருந்திய

கலாபத்தினையுடைய பச்சைமாமயிலின்மீது, தோன்றும் - எழுந்தருளிக்காட்சியருளும், செவ்வி கொண்டவேல்கு இறை- அழகினைப்பொருந்திய ஞானசத்தியாகிய வேலாயுதத்தினைத் தாங்கிய குமாரபரமேசுவரனுடைய, இருபொன் சரணம் - இரண்டு அழகிய திருவடிகளையும், முடிமீது - சிரத்தின்மேல் (தலைமிசை) வணங்கியணிந்து, உளமகிழ்வு கூர்ந்து கொள்வாம் - மனநிறைவுடைய மகிழ்ச்சி மிகப்பெற்றிடுவோம். (எ - று)

(கு - ரை) கந்தப்பெருமான் சூரபன்மாவை யழிக்குமுன் தனக்கு ஊர்தியாக்கொண்டது ஆட்டுக்கிடாய் ஆகும். மாமுதல் தடிந்தபின் மாவின்ஒருகூறு மயிலும் ஒருகூறு குக்குடமும் ஆகி ஊர்தியும் கொடியுமாயின. அசுரரைக் கொன்று நன்று புரிந்தருளியதற்கு அமரேசன் குமரேசனைக் கூப்பிட்டுத் தன் மகளாராகிய தெய்வயானையினை மணம்புரிந்து கொள்ளுமாறு வேண்டலின் திருப்பரங்குன்றில் விருப்புடன் திருமணம் புரிந்துகொண்டனர். அறுமுகப்பெருமானின் வலப் பால் வள்ளியம்மையாரும் இடப்பால் தேவகுஞ்சரியாரும், திருக்கரமாகிய நடுவில் வேலாயுதமும், அமையப்பெற்றிருத் தல் இச்சா கிரியா ஞானசத்திகள் ஆம்எனலை யறிவித்தற் பொருட்டாம். இம்முச்சத்திகளைக்கொண்டு ஆன்மவர்க்கங் கட்கு அறிவு இச்சை தொழில்களை யருளுவர். செவ்வி - அழகு (பதம்). குறமான் – வள்ளியம்மையார், தொண்டர் - அடியவர், மயில்வாகனனை மனத்திற் கொள்பவர் மாட்சி பெரிதென்பார் தொண்டர் போற்றிடத் தோன்றும் என்றார். யாம் எழுவாய், கொள்வாம் 'பயனிலை' சரணம் – செயப்படு பொருள்.

நாமகள் துதி

(தரவு கொச்சகக்கலிப்பா)

பிள்ளைமதி வேணியையாற் றெம்பெருமான் றுதிபேச
வொள்ளியமென் பசுந்தோட்டி னூற்றிருந்து நறவொழுகும்
வெள்ளைநளி னத்தவிசின் மேவியுல கேழீன்ற
தள்ளைவிதி காந்தைதுணைத் தாண்மலர்க டலைக்கணிவாம்.

(இ - ள்) பிள்ளைமதிவேணி ஐயாறு எம்பெருமான் துதி பேச - இளம்பிறைச் சந்திரனை அழகிய குறுங்கண்ணியாகத்

தரித்த கபர்த்தமெனும் பெயரிய சடாமகுடத்தினையுடைய திருவையாற்றுத் திருக்கோயிலிலமர்ந்திருக்கும் எம்பெருமானின் துதியாகப் பதிற்றுப்பத்தந்தாதியெனு நூலியற்றி நூலை, (தோத்திரஞ் சொல்ல) ஒள்ளிய மெல் பசும் தோட்டின் ஒளி பொருந்திய மென்மையாகிய இயற்கை நலம் குன்றாத, இதழ்களினின்றும், ஊற்றிருந்து - பெருக்கெடுத்து, நறவு ஒழுகும் - தேன் சொரியும், வெள்ளை நளினம் தவிசின்மேவி - வெண்டாமரை மலராகிய ஆசனத்தின்கண் எழுந்தருளி, ஏழுலகு ஈன்றதள்ளை - ஏழ் உலகங்களினையும் படைத்தருளியுள்ள (உண்டாக்கியுள்ள) தாயாகிய, விதி - பிரமதேவனுக்கு, காந்தை - தலைவியாகிய சரசுவதி தேவியாரின், துணை தாள் மலர்கள் - இரு திருவடிமலர்களையும், தலைக்கு அணிவாம் - முடிக்கு அணிகலமாகத் தரித்துக்கொள்வாம். (எ - று).

(கு - ரை) பிள்ளைமதி - வளர்பிறைச்சந்திரன், வேணி - சடாமகுடம், தள்ளை - தாய், குட்ட நாட்டார் வழக்கு (தாயைத் தள்ளையென்பது) உலகுஏழ், மேல்கீழ் எனக்கொண்டு பதினான்கு ஆக்குக. காந்தன் - தலைவன், பெண்பால் - காந்தை, சத்தி என்பது பொருள். உலகேழும் உண்டாக்கும் வண்ணம் கண்டான் - பிரமன். விதி - பிரமன். ஊற்று - பெருக்கு. தோடு - இதழ். தவிசின்மேவி - இருக்கைக்கண் இருந்து, தள்ளையென்பது சரசுவதிக்கும் பொருந்துமாயின்கொள்க. (யாம், எழுவாய், அணிவாம், பயனிலை, தாண்மலர்கள் - செயப்படுபொருள்.

திருநந்தித்தேவர் துதி

(எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

சந்தச்செய்யுள்

ஒப்பி னற்புக ழப்ப ருள்ள முவந்து கண்களி கூரவே
சுப்பி ரக்கயி லாய சேவை யளித்த வன்னுதி சொற்றிடக்
கைப்பி ரம்புகொ டும்ப ரொண்சுடர் காலு மாமுடி தாக்கிடும்
செப்ப ருந்திற னந்தி சேவடி சென்னி சேர்த்து வணங்குவாம்.

(இ - ள்) ஒப்பு இல் நல்புகழ் அப்பர் - உவமை இல்லாத (ஒப்புரைக்க ஒண்ணாத) நல்ல புகழையுடைய திருநாவுக்கரசு நாயனருடைய, உள்ளம் உவந்து கண்களிகூர ஏ, மனமானது மகிழ்ந்து கண்களானவை களிப்புமிக, சுப்பிரம் கயிலாயசேவை

அளித்தவன் - வெள்ளி மயமாகிய திருக்கயிலாயக் காட்சியினைத் தரிசிக்கத் தந்தருளியவனுகிய எந்த ஐயாற்றுப் பரமசிவனே அந்தப் பரமசிவன்மீது, துதிசொற்றிட - சொன்மாலையாகிய துதியினைக் கூறித்துதிக்க, கை பிரம்பு கொடு - திருக்கையின் கண் பிரம்புத் தடியினைத் தாங்கிக்கொண்டு, உம்பர் - தேவர் களுடைய, ஒள்சுடர்காலும் மாமுடி - ஒளிபொருந்திய பிரகாச முடைய) ஒள்ளிய சுடரினை வீசும் பெரிய முடிகளில், தாக்கிடும் - அடித்து ஒதுக்குகின்ற, செப்பு அரும்திறல் நந்தி - கூறற்கு அரிய வெற்றிப்புகழ் உடைய திருநந்திதேவர் தமது, சேவடி - செம்மையாகிய திருவடிகளை, சென்னி சேர்த்து - முடியிற்சூடி, வணங்குவாம் - மனமொழி மெய்களால் வணங்கு வாம். (எ - று).

(கு - ரை)

“ அங்கணன் கயிலைகாக்கும் அகம்படித் தொழின்மை பூண்டு
நங்குரு மரபிற் கெல்லா நாத னுகிப்
பங்கயந்துளவ நாறும் வேத்திரப் படைபொறுத்த
செய்கயம் பெருமானந்தி (சேவடி) சீரடிக் கமலம் போற்றி ”

என்னும் செய்யுளீண் டறிதற்பாற்றும். கூர்தல் - மிகுதல், காலல் - சொரிதல். நந்தி - இறைவன் திருநாமங்களிலொன் ரும். நந்தியீச்சுரன், ஏறூர்ந்தோன், நக்கன், மாஞான மூர்த்தி, எனவும், நந்திநாம நவச்சிவாயவே, எனவும் வருதல் கொண்டு தெளியப்படும். நந்தி - ஞானச்செல்வதை யருள்ப வன் என்பது பொருள். சிலாத முனிவர் புதல்வராகிய சப்பேசருக்கு ஆசாரியாபிடேகம் பண்ணி தீட்சாநாமம் திருநந்தியெனச் சூட்டியருளினர் திருக்கயிலாய பரம்பரை வருமுதற் குரவராவர். சுப்பிரம் - வெள்ளி, மேசவை - தொண்டு ஒண்மைசுடர், ஒளித்தன்மை ஒண்மை, செம்மையடி சேவடி. தாக்கிடும் - அடித்து ஒதுக்கிடும். நந்தியெம்பெருமான் ஆசாரி யனை இலங்கலின் அவர்களுடைய திருவடிகளைச் சிரமேற்சூடி பின்வணங்குவாம் எனும் நூற்கருத்துப் பொலிவுடையது. யாம், எழுவாய், வணங்குவாம், பயனிலை.

(தொடரும்)

திருமந்திரம் - குறிப்புரை

திருக்குறள்வேள்,

திரு. ஜி. வரதராஜப் பிள்ளை B. A,

(மலர் 30. இதழ் 1, பக்கம் 30 இன் தொடர்ச்சி)

147 சீக்கை விளைந்தது செய்வினை மூட்டிற்ற
ஆக்கை பிரிந்த தலகு பழுத்தது
மூக்கினிற் கைவைத்து மூடிட்டுக் கொண்டுபோய்க்
காக்கைக் குப்பலி காட்டிய வாறே.

குறிப்புரை :- சூக்கை - நோய். செய்வினை மூட்டிற்ற - பிராரத்தவினை நீங்கியது. பிராரத்தவினை நீங்கியதும் உடம்பு நில்லாது என்க. அலகு பழுத்தது - பழுஎலும்பு வலிமைகெட்டது. மூக்கினில் கைவைத்தலாவது, உயிர் நீங்கியபின் மூச்சு உள்ளதா என்று பார்த்தல். காக்கைக்குப் பலியிடுதல் இடுகாட்டில் இறுதியில் செய்வது.

உயிர் பிரிந்தபின் செய்யும் செயல் கூறியவாறு.

148 அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்
இடப்பக்கமே இறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே.

குறிப்புரை :- அடுதல் - சமைத்தல். அடிசிலை உண்டார் என்பது, சமைத்துவைத்த உணவை அருந்தினர் என்றபடி. மடக்கொடி - பெண். மந்தணம் - சேர்க்கை (இடக்கரடக்கல்) இறை - சிறிது. கிடந்து ஒழிதல் - இறந்துபடுதல்.

எத்துணை விரைவில் உயிர் நீங்குகிறது என்பது உணர்த்தப்பட்டது என்பதாம்.

149 மன்றத்தே நம்பி மாடம் எடுத்தது
மன்றத்தே நம்பி சிவிகைபெற் றேறினான்
மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினான்
சென்றத்தா வென்னத் திரிந்திலன் தானே

குறிப்புரை :- மன்றம் - மயானம். மாடம் - சிதை. சுடுகாட்டில் இறந்தவர்களை வைப்பதற்கு எடுப்பது என்க. சிவிகை - பாடை. முக்கோடி - மூன்றுமுழக் கோடியாடை. மயானத்தே செய்யும் கிரிகை என்க அத்தா என்ன - பிள்ளைகள் சென்று அப்பா என்று அழைக்க. திரிந்திலன் - மீண்டிலன்.

சுடுகாட்டுக்குப் போனது திரும்பாது என்பதாம்.

'09 வாசந்தி பேசி மணம்புணர்ந் தப்பதி
நேசந் தெவிட்டி நினைப்பொழி வார்பின்னை
ஆசந்தி மேல்வைத் தமைய அழுதிட்டுப்
பாசந்தீச் சுட்டுப் பலியட்டி னார்களே.

குறிப்புரை :- வாசந்தி - நிச்சயதாம்பூலம், மணத்துக்கு முன் செய்யும் வினை. பதி நேசம் தெவிட்டுதலாவது, அன்பு மாறுதல். ஆசந்தி - பாடை. அமைய அழுதலாவது, ஒப்பாரி வைத்தல். பாசம் - பாசத்தார், ஆகுபெயர். தீச்சுடுதல் - நெருப்பு வைத்தல். பலிஇடுதல் - பிண்டம் போடுதல் அல்லது வாய்க்கரிசி போடுதல்.

அன்புடையார் பொருத்தமாக அழுது பலிஇடுவார்கள் என்பதாம்.

151 கைவிட்டு நாடிக் கருத்தழிந் தச்சற
நெய்யிட்டுச் சோறுண்ணும் ஐவரும் போயினர்
மையிட்ட கண்ணாளும் மாடும் இருக்கவே
மெய்விட்டுப் போக விடைகொள்ளு மாறே.

குறிப்புரை :- நாடிகைவிடுதலாவது, நாடிபார்ப்பவர் உயிர் தங்காது என்று கைவிடுதல். கழித்தழிதல் - நினைவுதப்புதல் அச்சற - உயிர் நீங்க. ஐவர் - ஐந்து இந்திரியங்கள். உயிர் நீங்கும்போது உள்ளநிலை என்க. 'புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட்டு அலமந்தபோது' என்ற வாக்

கையும் கருத்தில் கொள்க. மையிட்ட கண்ணாள் - மைதீட்டிய கண்ணையுடைய மனையாள். மாடு - செல்வம். மெய் - உடம்பு.

மனைவியும் சுற்றமும் நிற்க உயிர்நீங்கிப் போயிற்று என்பதாம்.

152 பந்தல் பிரிந்தது பண்டாரம் கட்டற்ற
ஒன்பது வாசலும் ஒக்க அடைந்தன ‡
துன்புறு காலந் துரிசுவர மேன்மேல்
அன்புடை யார்கள் அழுதகன் றூர்களே.

குறிப்புரை :- பந்தல் பிரிந்தது - உடம்பாகிய பந்தல் பிரிந்தது. பந்தல் - விதானம், உடலைச் சூழவுள்ள உயிர்நிலை பெற்ற ஆகாய மண்டலம். பண்டாரம் கட்டற்ற என்பது - உயிர்நிலையாகிய களஞ்சியம் கட்டுவிட்டுப் போயிற்று என்றபடி. ஒன்பது வாசல் - கண் இரண்டு, நாசி இரண்டு, செவி இரண்டு, வாய் ஒன்று, கருவாய் எருவாய் இரண்டு. காலத்துரிசு - கால முடிவு.

காலமுடிவில் உடம்பின் கட்டுக்கோப்பு கலைந்து பிராணன் நிலை நீங்கும் என்பதாம்.

153 நாட்டுக்கு நாயகன் நம்மூர்த் தலைமகன்
காட்டுச் சிவிகையொன் றேறிக் கடைமுறை
நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறைகொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே.

குறிப்புரை :- நாட்டுக்கு நாயகன் - நம்மூர்த் தலைமகன்; என்பது, நாட்டுக்கு மட்டுமன்றி ஊருக்கும் தலைவன் என்றபடி. அத்துணைச் செல்வாக்கு உள்ளவனும் என்க. காட்டுச்சிவிகை சுடுகாட்டுக்கு எடுத்துச்செல்லும் பாடை. கடைமுறை - கடைசியில். நடத்தலாவது, சிவிகையில் செல்லுதல்.

நாட்டுக்கு நாயகனுகிலும் கடைசியில் சுடுகாட்டுக்குச் செல்ல வேண்டியதுதான் என்பதாம்.

154 முப்பதும் முப்பதும் முப்பத்தறு வருஞ்
செப்ப மதிளுடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்ப மதிளுடைக் கோயில் சிதைந்தபின்
ஒப்ப அனைவரும் ஓட்டெடுத் தார்களே.

‡ அடைத்தன என்றும் பாடம்.

குறிப்புரை :- முப்பதும் முப்பதும் முப்பத்தறுவரும் - தொண்ணூற்றாறு தத்துவங்களும். தத்துவங்கள் முப்பத்தாறும், தாத்விகங்கள் அறுபதுமாம் என்க. செப்பம் – செம்மை. கோயில் உடம்பு. ஓட்டெடுத்தார் - ஓடிப்போயினர்.

உடம்பு அழியத் தத்துவங்கள் முதலிய நீங்கும் என்பதாம்.

155 மதுவூர் குழலியும் மாடும் மனையும்
இதுவூர் ஒழிய இதணம தேறிப்
பொதுவூர் புறஞ்சுடு காடது நோக்கி
மதுவூர வாங்கியே வைத்தகன் றார்களே.

குறிப்புரை :- மதுவூர்குழலி - தேன் பிலிற்றும் கூந்தலை யுடையவள். மனை - வீடு. இதுவூர் ஒழிய - இவை ஊரின் கண்ணே தங்கிவிட. இதணம் - பாடை. பொதுவூர் புறஞ்சுடு காடு என்பது, ஊருக்குப் பொதுவாகிய புறத்தேயுள்ள சுடுகாடு. மதுவூர வாங்குதலாவது, மயக்கத்தோடு பாடையினின்றும் எடுத்தல். வைத்தல் - சிதையில் வைத்தல்.

புறச் சார்புகள் நீங்கச் சிதையில் வைத்துவிட்டுச் சென்றார் கள் என்பதாம்.

156 வைச்சகல் வுற்றது கண்டு மனிதர்கள்
அச்சக லாதென நாடும் அரும்பொருள்
பிச்சது வாய்ப்பின் தொடர்வுறு மற்றவர்
எச்சக லாநின் றிளைக்கின்ற வாறே.

குறிப்புரை :- வைச்சு - சுடுகாட்டில் வைத்து அச்சு - நிலை அரும்பொருள், இகழ்ச்சிக் குறிப்பு. உடம்பு அழிவதைக் கண்டும் அரும்பொருள் என்று எண்ணுவது அறியாமை என்க. பிச்சு - பித்து. பிச்சது வாய்ப்பின் தொடர்வுறு மற்றவர் என்பது, மயக்கமுற்று அதனைப் பேணுவதற்கு அலையும் மனிதர்கள் என்றபடி. எச்சு - மேன்மை. அகலாநின்று - நீங் - நின்று இளைத்தல் - வருந்துதல்.

யாக்கை நிலையாமை அறிந்தும் உலக மயக்கத்தைக் கூறியவாறு.

(தொடரும்)

ஆழ்வார் அழகநுபவம்

செஞ்சொற்கொண்டல், புலவர்,

திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip.Ling.

(மலர் 30. இதழ் 1. பக்கம் 35 இன் தொடர்ச்சி)

பெண்களுக்கு முன்னே தாழ்ந்து நிற்கும் திருமால் பேரழகு, ஆழ்வார் சடகோபர் உள்ளத்துக் கிளர்ந்தெழு கின்றது. ஆம்; அதுவும் ஓரழகே அன்றோ? 'அவர்களைப் படுக்கையிலே வைத்துத் தான் தாழநின்று திருவுள்ளத்தில் கிடக்கிறத்தை அருளிச்செய்யலாகாதோ' என்னும்; தன்னைத் தொழுது வணங்குகின்றவர்கள் புறம்பே உண்டே? இனி 'ரசிகத்வ' மாவது தான் இவர்களுக்குத் தாழநிற்கையே அன்றோ? என்று எழுதுவர் ஈட்டுரைகாரர். (337 - உரை) ரசிகத்வம்' என்பது சுவைஞனது தன்மை, இறைவனுடைய பேரழகிலே ஈடுபட்டுப் 'பரமரசிகராக' - சீரிய சுவைஞராக நிற்கும் இப் பெருங் கவிஞர்க்குக் கடவுளே ஒரு சுவைஞனாகக் காணப்பெறுவதும் களித்தற் குரிய ஒன்று அன்றோ?

இவ்வாறு ஊடற்காலத்துக் காதலன் காதலியைத் தழுவி யும் பணிந்தும் அத்துனியைத் தீர்த்திடுவன் என்பதும் தமிழ் நூல் வழக்கே.

" மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
நினையுங்காலைப் புலவியுள் உரிய "

(தொல். பொருள் 227.)

என்பர் தொல்காப்பியரும்.

" கொந்தழல் வேற்கணால் என்
ஆவி கூட்டுண்ட கொம்பே!
செந்தழை யலங்க லேந்திச்
சீரடி பரவ வந்தேன்

உய்ந்தினிப் பணிசெய் வேனே
உடம்பொழித் தேகுவேனே
பைந்தழை யல்குற் பாவாய்
பணியெனப் பரவினனே " (சீவக. 1499)

எனவரும் திருத்தக்க தேவரது இனிய பாடல் இக் கருத்துத் தோன்ற இலங்குவதே ஆகும்.

ஒரு காதலி இறைவன் பேரழகில், பேரருளில் ஈடுபட்டு உருகும்நிலை (352) ஆழ்வார் கவிதையில் அழகுற விளங்கு கின்றது. பெண்களே! நீங்களும் ஒவ்வொரு பெண்ணைப் பெற்று விரும்பி வளர்க்கின்றீர்கள், யான்பெற்ற பெண்ணினைக் குறித்து எவ்வகையிற் பேசுவேன்? சங்கு என்கின்றாள்; சக்கரம் என்கின்றாள்; துழாய் என்கின்றாள்; இரவும் பகலும் இங்ஙனமே இயம்புகின்றாள். இதற்கு என்செய்வேன் என்று தாயொருத்தி கூறுவதாகக் கற்பனை; தேர்ந்த சொற்கள், பெண் ஒருத்தியின் அவலத்தை எழுதிக் காட்டும் சுவை அழகு சொல்லுக்குச் சொல் சுடர்விடுகின்றது.

" நங்கைமீர்! நீரும்ஓர் பெண்பெற்று நல்கினீர்
எங்ஙனனே சொல்லுகேன் யான்பெற்ற ஏழையைச்
சங்குஎனும் சக்கரம்என்னும் துழாய்என்னும்
இங்ஙனே சொல்லும் இராப்பகல் என்செய்கேன். (352)

தன்னுடைய அழகனைத்தும் தன் காதலனுக்கே உரிய தென்று காதலி கருதுவதும், தன்னுடைய காதலியின் அழகனைத்தும் தனக்கே உரியதென்று காதலன் கருதுவதும் தமிழ்நூல்களிற் காணப்பெற்ற செய்திகள். கண்ணகியைக் கோவலன் பிரிந்திருந்த ஞான்று, கண்ணகி கோலம்செய்து கொள்ளாதிருந்த நிலையை இளங்கோவடிகள் இனிது விளக்குவர். 'தவள வாணகை கோவலன் இழப்ப' என்பதனால்,செயற்கைக் கோலமும் இயற்கைச் சிரிப்பழகும் ஆகிய இரண்டுமின்றி என்றதன் நுட்பம் காட்டப் பெறுகின்றது. அழகனான திருமாலுக்குத் தன் அழகு உரியதென்றும் இல்லையேல் தான் அணிகலங்கள் பூண்டும் அவற்றாற் பயன் ஏதும் இல்லையென்றும் (416) கூறி ஒருபெண் வருந்துவதாகக் கற்பனை.

" வளரொளிய கனலாழி
வலம்புரியின் மணிநீல
வளரொளியான் கவராத
வரிவளையான் குறையிலமே " (416)

என்பது அவ்வழகுக் கவிதையின் செம்பாதி. வடிவழகை உடையவன் தானேவந்து மேல்விழுந்து விரும்பி வாங்கி இட்டுக்கொள்ளாத இவ்வளையால் எனக்கு என்ன காரியம் உண்டு என்கிருள் என்ற ஆழ்பொருள் காட்டும் ஈட்டுரை.

நிறத்தை உடைய தடந்தோள்கள் நான்கினையும், சிவந்த வாயினையும், சிவந்த தாமரை போன்ற திருக்கண்களையும், அறமே செய்கின்ற சக்கரத்தைக் கொண்ட அழகிய திருக்கையையும், கரிய வடிவழகையும் கொண்ட பெருமானைக் கண்டுகொண்டேன் என்று இவர் களிக்கும் இடங்கள் பல உண்டு. (448) 'இவரை மெய்மறக்கப் பண்ணிற்று அவன் வடிவு' என்பர் பேருரைகாரர். ஆழ்வாருடைய திருமேனி இறைவனுடைய திருமேனியை மறக்கச் செய்தமையும் கூறப் படும். அவனது வடிவழகிலே ஈடுபட்டுத் தம்முடைய திரு மேனியை மறத்தலும் கூறப்படும். தம்மை மறந்து அழகிலே கலந்துநின்ற நிலையை விளக்கப் புகுகின்ற உரை, 'இவ் வுடம்பு அவ்வுடம்பை மறப்பித்தாற்போலே, இப்போது அவ் வுடம்பு இவ்வுடம்பை மறப்பித்தது' என வருகின்றது. தம்மையே மறக்கச்செய்து தன்னில் ஈர்த்து ஒன்ருக்குகின்றது அத்தெய்வப்பேரழகு என்பதனை இதனினும் சிறப்பாகக் கூற முடியுமா ?

" புறமறக் கட்டிக் கொண்டு
இருவல்வினையார் குமைக்கும்
முறைமுறை யாக்கை புகல்ஒழியக்
கண்டுகொண் டொழிந்தேன்
நிறமுடை நால்தடந்தோள்
செய்யவாய் செய்யதாமரைக்கண்
அறமுயல் ஆழி அங்கைக்
கருமேனி அம்மான் தன்னையே " (448)

என்பது அவ்வழகுறு நறுங்கவி.

திருக்குறுங்குடியிலே நம்பியின் பேரழகு தம் நெஞ்சுள் நிறைந்தமையை எடுத்துப் பேசிப் பேசி மகிழ்கின்றார் ஆழ்வார். (491, 492) "கோல நீள்கொடி மூக்கும், தாமரைக் கண்ணும் கனிவாயும், நீலமேனியும் நான்கு தோளும் என் நெஞ்சம் நிறைந்தவே" (492) "தொக்க சோதித் தொண்டை வாயும் நீண்ட புருவங்களும், தக்க தாமரைக் கண்ணும் பாவியேன் ஆவியின் மேலனவே" (491) நான்கு தோள்கள் என்றதன் நயத்தை அநுபவிக்கின்றது ஈட்டுரைகாரரது இனியநெஞ்சம்: "ஒரு பெருவெள்ளம் போலே ஆயிற்றுத் திருமேனி. அதனை நீந்துகைக்குச் சில தெப்பங்கள் போலே இருக்கிற திருத்தோள்கள் நான்கு" என்பது அது. "நிறைந்த சோதிவெள்ளம் சூழ்ந்த நீண்ட பொன்மேனி யொடும், நிறைந்து என்னுள்ளே நின்றொழிந்தான்" (493) எனமகிழ்வில் மலர்கின்றார். 'நம்பியுடைய திருமேனியில் அழகு வெள்ளம் என்நெஞ்சிலே வேர் வீழ்ந்தது' என்கிறாள்-என்று ஈடு கூறுவது உணர்ந்தின்புறத் தக்கது.

"திருவுருவு கிடந்தவாறும், கொப்பூழ்ச் செந்தாமரைமேல் திசைமுகன், கருவுள் வீற்றிருந்து படைத்திட்ட கருமங்களும், பொருவிலுன் தனிநாயகமவை கேட்குந்தோறும் என் நெஞ்சம் நின்று நெக்கு, அருவிசோரும் கண்ணீர் என்செய்கேன் அடியேனே" (549) என்று அழகனுபவத்தை வெளிப்படை யாக்கும் விழுமிய பாடல்கள் திருவாய்மொழியில் எண்ணற்றன உண்டு என்று கூறலாம்.

திருப்பாணாழ்வார்:

அழகிய மணவாளன் என்ற திருப்பெயர் பெற்று விளங்கும் திருமாலது பேரழகிலே திருவடிமுதல் திருமுடி வரை ஈடுபட்டுத் திருப்பாணாழ்வார் பாடுவன இனிய கவிதை ஓவியங்களாக இலங்குகின்றன. "அமலன் ஆதிபிரான்" எனத் தொடங்கும் கவிதைகள் அவை. திருமலை நம்பிகள் என்பார் அருளிச்செய்த தனிப்பாட்டு இவரது அழகநு பவத்தின் மாட்சியை எடுத்துக் காட்டுகின்றது:

"காட்டவே கண்ட பாத
கமலநல் லாடை உந்தி
தேட்டரு முதர பந்தம்
திருமார்பு கண்டம் செவ்வாய்

வாட்டமில் கண்கள் மேனி
முனியேறித் தனிபுகுந்து
பாட்டினுற் கண்டு வாழும்
பாணர்தாள் பரவி னேமே"

என்பது அவரது போற்றிக்கவி. அழகிய தமிழ்ப்பாட்டால் அழகிய மணவாளனை எவ்வாறு கண்டு வாழ்கின்ருர் இவ் வருளாசிரியர் என்பதை இது நன்கு எடுத்து விளக்குகின்ற தன்ருே?

முதற்கண் ஆழ்வார் திருவடித்தாமரைகளில் தோய்ந்து உருகுகின்ருர்; அழுக்கற்றவனுகவும், உலகுக் கெல்லாம் முன்னே தோன்றியவனுகவும், அடியார் பலர்க்கும் என்னைத் தொண்டுபடச்செய்த விமலன் ஆகவும், தேவர் தலைவனுகவும், மணமார்ந்த சோலைகளை உடைய வேங்கடவனுகவும், நிமல னுகவும், நின்மலனுகவும், நீதிதேவனுகவும், திருவரங்கத்துப் பெருந்தலைவனுகவும் உள்ள பரம்பொருளின் திருக்கமல பாதங்கள் என் கண்ணிலேயே உள்ளன" என்கின்ருர் ஆழ்வார்.

இவ்வாறே, "சிவந்த ஆடையின்மேற் சென்றதாம் என சிந்தனையே" (2) என்றும், "அயனைப் படைத்ததோர் எழில் உந்தி மேலதன்ருே அடியேன் உள்ளத்தின்னுயிரே" (3) என்றும், "திருவயிற்று உதரபந்தம் என் உள்ளத்துள் நின்றுலாகின்றதே" (4) என்றும், "திருவார மார்பு அது அன்ருே அடியேனை ஆட்கொண்டதே" (5) என்றும், அண்டரண்ட பகிரண்டத்தொரு மாநிலம் எழுமால்வரை முற்றும் உண்ட கண்டங் கண்டீர் அடியேனை உய்யக்கொண் டதே" (6) என்றும், "மாயனுர் செய்யவாய் ஐயோ என்னைச் சிந்தை கவர்ந்ததுவே" (7) என்றும், "கரியவாகிப் புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப் பெரியவாய கண்கள் என்னைப் பேதைமை செய்தனவே" (8) என்றும் பாடி மகிழ்கின்றர் இப் பாணுழ்வார்.

அழகநுபவம் தம் உயிரைத் தோய்கின்றது என்றும், உள்ளத்துள் உலாவுகின்றது என்றும், சிந்தை கவர்ந்தது என்றும், பேதைமை செய்தது என்றும் பாடுகின்ருர் இவர்.

'ஐயோ' என்று அந்த அநுபவ இன்பத்தின் வேதனை தாங்காமல் ஆரா இன்ப அருங்கவி தொடுக்கின்றார் ஆழ்வார்:

" ஆலமா மரத்தின் இலைமேலொரு பாலகனாய்
ஞாலமேழு முண்டான் அரங்கத்து அரவின்னணையான்
கோலமாமணி யாரமும் முத்துத் தாமமும் முடிவில்ல
தோரெழில்
நீலமேனி ஐயோ நிறை கொண்டதென் நெஞ்சினையே "

என்று பின்னும் பேசுகின்றார்.

பேரழகில் ஈடுபட்டு இன்புற்ற தம் கண்கள் வேறு எதனையும் காணமாட்டா என்கின்றார் இவர் உறுதியாக. மேகநிறமும், வெண்ணெய் உண்டதனால் நறுமணம்வீசும் செவ்வாய் இதழ்களும் கொண்டு, அரங்கத்தே அரசர்க்கரசனும் அருந் திருக் கோலம் கொண்டு வீற்றிருக்கும் அமுது என்கின்றார் இவர். தேவர் அமுது உண்டார்க் கன்றி உறுபயன் தராது, ஆயின் ஆராவமுதாக விளங்கும் இவ்வமுதோ கண்ட அளவிலேயே ஈர்த்துப் பிறிதொன்றைக் காணவொட்டாது தடுக்கும் பெருந்திறம் உடையது என்பாராய் ஆழ்வார் அகமுருகப் பாடும் நிறைவுத் திருப்பாட்டு இது:

" கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்டவாயன்என் உள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோன் அணி அரங்கன்என் அமுதினைக்
கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே "

இவ்வாறு தம்முடைய பத்துத் திருப்பாட்டுக்களிலும் அழகிய திருக்கோலத்தை மேலும் அழகுபடுத்தும் அருங்கற்பனைகள் பலவற்றை வெளிப்படுத்துகின்றார் ஆழ்வார்.

(தொடரும்)

திருவையாற்றில் திருக்குடமுழுக்கு

(31 — 3 — 1971)

வித்துவான்,

ஸ்ரீமத். மௌன. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

கட்டளை விசாரணை,

ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானம், திருவையாறு.

களித்துக் கலந்ததோர் காதற் கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுது முன்னின்ற இப்பத்தரைக் கோதில்
தெளித்துச் சுவைஅமுதூட்டி அமரர்கள் சூழிருப்ப [செந்தேன்
அளித்துப் பெருஞ்செல்வ மாக்கும் ஐயாறன் அடித்தலமே,

— அப்பர்.

பூலோககைலாசம் எனப் பொலிவுற்றுவிளங்கும் சிதம்பரம் திருக்காளத்தி முதலிய தலங்கள் சிலவற்றுள் தென்கைலாயமாகச் சிறப்புற்றுத் திகழ்வது திருவையாறு. இத்தலம் தேவாரம் அருளிய மூவரது பாடலும் பெற்ற சிறப்புடையது. மணிவாசகரும் ஐயாறமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானாய் என்று பாடி அகமகிழ்கின்றார். சைவ சந்தான முதற் குரவராகிய திருநந்திதேவர் அவதாரத் தலமாக விளங்குகிறது இத்தலம்.

சிலாத முனிவரின் அருந்தவத்திற்கிரங்கிய ஆண்டவன் நந்தியெம்பெருமானை மகவாக அருள்பாலித்தார். அம்மகவே செப்பேசர் என வளர்ந்தது. அதற்கு 16 வயதுடன் வாழ்வு முடிவதை எண்ணிய பெற்றோர் துன்புற்றனர். அது கண்ட செப்பேசர் இறைவனைக் குறித்து நீரில் ஒற்றைக்காலில்நின்று கடுந்தவம் புரிந்தார். நீர்வாழுயிர்கள் செப்பேசர் உடலை அரித்துத் தின்று ஊறு விளைத்தன. தவநிறைவில் செப்பேசருக்கு வரம் அருளிய இறைவன் அவர் உடலில்தோன்றிய ஊறு நீங்குதற்காகக் கங்கைநீர், பிரமன்கமண்டலநீர், அம்பிகையின் கொங்கைநீர், மேகந்தரும் மழைநீர், இடபநந்தியின் வாய் நுரைநீர் என்ற ஐந்து நீரினாலும் அபிஷேகம் செய்து உடலில் ஏற்பட்ட ஊறுகளைப் போக்கியருளினார். இக்காரணத்தால் ஐயாறு எனப் பெயர்பெற்றது இத்தலம். தஞ்சைக்கும் திருவையாற்றிற்கும் இடையே தோன்றியுள்ள ஐந்தாறுகளினால் ஐயாறெனப் பெயர்பெற்றது என்பது பொருந்தாக்கூற்று.

யமனுக்கு அஞ்சிய சுசரிதன் என்ற அந்தணச் சிறுவன், ஐந்தெழுத்தோதி ஐயாறப்பரை அன்புடன் தொழுதமையால், ஐயாறப்பர் துவாரபாலகரை ஏவி இயமனை அடக்கி அந்தணச் சிறுவனை ஆட்கொண்டார். இதனால் துவாரபாலகர் ஆட் கொண்டாராக ஆலயத்தின் தெற்குவாயிலில் சிறப்புடன் திகழ் கின்றார். இத்தலத்தின் சிறப்புக்களுள் இது முக்கியமானது.

தென் கயிலாயம் வடகயிலாயம் என்ற இரு கோயில்களைத் தென் பிராகாரத்திலும், வடக்குப் பிராகாரத்திலும் கொண்டுள்ளது இப்பெருங்கோயில். திருக்கயிலைகாணச்சென்ற அப்பர் பெருமானுக்கு ஆடி அமாவாசையில் கயிலைக்காட்சி அருளிய அருமைப்பாடுடைய தலம். சேரமான்பெருமாள் நாயனாருடன் ஐயாறப்பரைத் தரிசிக்கச்சென்ற சுந்தரர்க்குக் காவிரி வெள்ளம் விலகி வழிவிட்ட வனப்புமிக்க தலம். இசைக்கு என்றுமே ஏற்றம் தந்து வருவது இத்திருவையாறு என்பதை அப்பர் அருளிய "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்ற திருத் தாண்டகத் தொடராலும், இத்திருக்கோயிலின் மூன்றாம் பிரா காரத்தின் மேற்குப் பகுதியில் ஒலியெழுப்பினால் ஒன்று ஏழாக ஒலிப்பதாலும் இன்றும் உணரலாம். இதனை வலியுறுத்தவே தான், இறைவனை நாதவடிவில் தொழுத தியாகய்யர் அவ தரித்து இறைவனை இசையினால் போற்றி வழிபட்டு இத்தலத் திலேயே அடக்கமாகியுள்ளார் என்பதும் சிந்தித்துப் பெருமை கொள்ளத்தக்கது.

இத்தலத்தில் நடைபெறும் சித்திரைப் பெருவிழா நிறை வில் நந்தியெம்பெருமான் திருமண ஊர்வலம் என்னும் ஐதி கத்தில் சப்தஸ்தான ஊர்வலவிழா வரலாற்றுச் சிறப்புமிக்கதாக ஆண்டுதோறும் நடைபெற்றுவருகிறது. இது இத்தலத்திற்கே உரிய தனிச் சிறப்புடைய விழாவாகும். திருவையாறு, திருப் பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் ஆகிய சப்தஸ்தானத் தலங்களுள் முதன்மையாகத் திகழ்வது இத்தலம்.

தருமையாதீன அருளாட்சியில் உள்ள 27 திருக்கோயில் களுள் திருவையாறும்ஒன்றாகும். இத்தலத்தில் 30 ஆண்டுகட்கு முன்னர் 24 ஆவது குருமூர்த்திகளின் காலத்தில் திருப்பணி செய்து மிக்க சிறப்புடன் மகாகும்பாபிஷேகம் செய்விக்கப்பெற் றது. அப்போது ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி திருக்கோயிலில்

லக்ஷக்கணக்கில்செலவிட்டு ஆர்வத்துடன் திருப்பணிசெய்தவர் தேவகோட்டைத்திருப்பணிச்செல்வர் திரு. சேவுகஞ்செட்டியாரும், அவர் குமாரர்களான திரு. மெய்யப்பச் செட்டியார், திரு அண்ணுமலைச் செட்டியார் முதலியோரும் ஆவார்கள்.

அப்பருக்குக் கயிலைக் காட்சி அருளிய ஐயாறப்பர் ஆலயத்திற்கு அதே ஆடி அமாவாசையன்று திருவருள் வாய்ப்பாகக் கயிலை கண்டு தரிசித்த தருமையாதீனம் 25 ஆவது குருமூர்த்திகளாக எழுந்தருளியுள்ள ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்கள் இப்போது இராஜகோபுரங்கள், விமானங்கள், மேல் தளம், கீழ்த்தளங்கள், மண்டபங்கள், பிராகாரத் தளவரிசைகள் முதலியவற்றைத் திருப்பணிச்செய்யத் திருவுளம்கொண்டவண்ணம், சுமார் நான்குலக்ஷரூபாய் ஆகும் என மதிப்பிட்டு மூன்ருண்டுகளாகத் திருப்பணிகள் நடைபெற்றுவருகிறது. மகாகும்பாபிஷேகத்திற்குரியநாள் குறிப்பிட்டிருப்பதை முன்னிட்டு இரண்டுமாதகாலமாகத் திருப்பணிகள் விரைந்து நடைபெற்றுவருகின்றன. பொதுமக்களிடமிருந்தும் பக்தர்களிடமிருந்தும் பெருமளவில் நிதி உதவி எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வைத்தீஸ்வரன்கோயில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது போல் வேத சிவாகம முறைப்படி மிகச் சிறந்த முறையில் ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி சமேத ஸ்ரீ ஐயாறப்பருக்கு சாதாரண ஆண்டு பங்குனித்திங்கள் 17 ஆம்நாள் (31—3—1971) புதன் கிழமை மகாகும்பாபிஷேகம் செய்துவைக்க ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளம் கொண்டுள்ளார்கள் பொருளாதார நிலையை ஈடு செய்வதற்கும், கூட்டத்தைக் கட்டுப்படுத்தி வேதாகமக் கிரியைகள் செம்மையாகச் செய்வதற்கும், எல்லோரையும் இவ் அறப்பணியில் பங்குகொள்ளச் செய்வதற்கும் ஏற்றவகையில் டிக்கட் அமைக்கப்பட்டிருக்கிறது. மேல் தளத்திலிருந்து தரிசிக்க விரும்புவோருக்கு ரூ. 100, ரூ. 50, ரூ. 25 என்ற முறையில் கட்டணம் அமைக்கப்பட்டிருக்கிறது. பிராகாரங்களிலிருந்து தரிசிக்க விரும்புவோருக்கு ரூ. 10, ரூ 5. என்று கட்டணம் அமைக்கப்பட்டிருக்கிறது. எல்லோரும் இவ்வருட்பணியில் – அறப்பணியில் உளமுவந்து உதவிசெய்யவேணுமாய் விரும்புகிரேம். திருப்பணி விரைவில் நிறைவுற்று மகாகும்பாபிஷேகம் இனிது நிறைவேற ஸ்ரீ அறம் வளர்த்தநாயகி சமேத ஸ்ரீ ஐயாறப்பரைப் பிரார்த்திக்கிரேம்.

சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்னாகரம்,

சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

(மலர் 30, இதழ் 1, பக்கம் 44 இன் தொடர்ச்சி)

अनन्ताद्या दलाग्रेषु पीठकण्ठे गणेश्वराः ।
पीठपादेषु लोकेशा स्तदस्त्राणि शिलोपरि ॥

— तन्त्रसारे

தளாக்ரங்களில் அநந்தாதிகளையும் பீடகண்டத்தில் நந்தியாதி கணேசர்களையும் பீடபாதத்தில் லோகேசர்களையும் ஆதாரசிலையின்மேல் அஸ்திரங்களையும் பூஜிக்கவேண்டும்.

— தந்திரசாரம்.

ஸாயரக்ஷா :

सायंकालेऽर्चयेद्देवं देवस्यावरणेन च ।
परिवारं न कर्तव्यं अर्चयेत्तु चतुर्मुखम ॥
रवेरस्तमयात्पूर्वं सायरक्षा त्रिनाडिका ।

— कारणागमम्

ஸாயம் ரக்ஷை என்ற ப்ரதோஷகால பூஜை என்பது சூரியன் அஸ்தமனத்திற்குமுன் மூன்று நாழிகையில் செய்ய வேண்டும் இதற்குப் பரிவார பூஜை கிடையாது. விநாயகர் நடராஜர் சுவாமி அம்மன் இவர்களுக்குப் பூஜை செய்ய வேண்டும் (சதுர்முக பூஜை என்பது லக்ஷணையாக சோமாஸ் கந்தர் ஆகும்). தீபம் அருச்சனைக்கு அரைநாழி. அபிஷேகம் அலங்காரம் நிவேதனம் இதற்கு முக்கால் நாழிகை ; உபசாரங் களுக்கு அரைநாழிகை. மத்தளம், தாளம், கீதம், நிருத்தம் இவைகளுக்கு ஒருநாழிகை. பரிவேஷத்திற்குக் கால்நாழிகை ஆக மூன்று நாழிகை பூஜாகாலமாம். — காரணம்.

ரஜநீ காலம் :

இதற்கு இரண்டாம் காலம் என்று அழைக்கப்படுகிறது. இது மஹாசந்திகாலம். அதாவது ஏழரை நாழிகை பூஜா காலம்.

... ... देहशुद्धिसमाचरेत् ।
स्नपनं कारयेत् पश्चात् द्वारपूजाविधीयते ॥
मूलबेरं च संस्नाप्य नैवेद्यं च ततः परम् ।
विघ्नेशं ताण्डवं चैव मूलबेरमतः परम् ॥
राजोपचारमार्गेण पूजयित्वा यथाक्रमम् ।
मध्ये सर्वत्र नैवेद्यं पार्वतीचण्डभैरवम् ॥
नैवेद्यं तु ततः पश्चादुपचारांस्तथैव च ।
हुताशनं समभ्यर्च्य नित्योत्सवमतःपरम् ॥

— कारणागमम्

தேஹசுத்தி செய்துகொண்டு ஸ்னபனபூஜை அக்னி காரியம் ஹோமம் செய்துகொண்டு த்வாரபூஜை செய்து மூல லிங்கத்திற்கு அபிஷேகம் செய்யவேண்டும்; பிறகு நிவேதனம். முறையே, விநாயகர், நடராஜருக்கு நிவேதனம் செய்து மூலஸ்தானத்திற்கு ராஜோபசாரமாகப் பூஜித்து அதன்பிறகு சோமாஸ்கந்தர் முதலிய மூர்த்திகளுக்கும், தக்ஷிணாமூர்த்தி முதலிய ஸகல பரிவாரமூர்த்திகளுக்கும் நைவேத்தியம் செய்து பார்வதி, சண்டன் பைரவர் இவர்களுக்கும் பூஜைசெய்து நித்யாக்னிகாரியம் செய்து நித்யோத்ஸவம் செய்து முடிக்க வேண்டும்.

ஷோடச உபசாரம் :— 1. ஆவாஹனம் 2. ஸ்தாபனம் 3. பாத்யம், 4. ஆசமனம், 5. அர்க்கியம், 6. அபிஷேகம், 7. வஸ்த்ரகந்தம் 8. புஷ்பம், 9. தூபதீபம் 10. நிவேதனம் 11 பலி, 12 ஹோமம், 13 ஸ்ரீபலி, 14 கேயம் வாத்யம், 15 நர்த்தனம், 16 உத்வாஸனம். — காரணம்.

பூஜை என்பது ஒன்பதுவிதமாக இருக்கிறது. அதாவது தீபாந்தம், நிவேத்யாந்தம், பல்யந்தம், (என்ற மூன்றும்

கந்யசத்ரயம்) ஹோமாந்தம், உத்ஸவாந்தம், தோத்ராந்தம் என்ற மூன்றும் மத்யமத்ரயம்) ஸளக்யாந்தம், சுளுகோத காந்தம், ப்ராணுக்னி ஹோத்ராந்தம் (என்ற மூன்றும் உத்தமத்ரயம்)

प्रथमं धूपमित्युक्तं द्वितीयं दीपमुच्यते ।
महादीपं तृतीयंतु चतुर्थं नागदीपकम् ॥
पञ्चमं वृषदीपञ्च मृगदीपं च षष्ठकम ।
सप्तमं शूलदीपं च अष्टमं कमठं भवेत् ॥
नवमं गजदीपं च दशमं व्याघ्रदीपकम् ।
सिंह्ममेका दशं प्रोक्तं ध्वजं द्वादशमुच्यते ॥
त्रयोदशं मयूरंस्यात्सर्वकामार्थसिद्धिदम् ।
पञ्चशक्यादि संयुक्त पूर्णकुंभं चतुर्दश ॥
ऋक्षं पञ्चदशप्रोक्तं षोडशं मेरुरुच्यते ।
नीराजनं तथा भस्म उपचारस्तु षोडश ॥
भोगाङ्ग शक्ति पूजांते पूर्णदीपमिहोच्यते ।— वीरागमम्

மற்றெருமுறை ஷோடசஉபசாரம் :- 1. தூபம், 2. தீபம் 3. மஹாதீபம் 4. நாகதீபம், 5. வ்ருஷப தீபம் 6 புருஷ மிருகதீபம் 7 சூலதீபம் 8 கமடதீபம் (ஆமை) 9 கஜதீபம் (யானை) 10 வ்யாக்ரதீபம் (புலி) 11 சிம்மதீபம், 12 த்வஜ தீபம், 13 மயூரதீபம், 14 பஞ்சதட்டுடன் கூடிய பூர்ணகும்பம் 15 நக்ஷத்ரதீபம் 16 மேருதீபம், நீராஜனம் பஸ்மரக்ஷை, போகசக்திபூஜை. பஞ்சதீபம் என்பன. — வீராகமம்.

மற்றெரு விதம் :— தூபம் தீபம், மஹாதீபம், நாகதீபம், வ்ருஷபதீபம், புருஷாமிருகதீபம், பூர்ணகும்பம், பஞ்சதட்டு (5) நக்ஷத்ரதீபம், மேருதீபம், நீராஜனம், பஞ்சஹாரத்தி என்ற பதினறு. — வாதுளாகமம்.

தூபம் :- ' துரபோதஹதிபாபாநி " தூபம் பாபத்தைப் போக்கும் என்றபடி முதலாவதாகச் செய்யப்படுவது தூபம்.

धूतशेष महादोष पूतिगन्ध प्रभावतः ।
परमानन्द जननात् धूपइत्यमिधीयते ॥ — ग्रन्थांतरे

மஹா தோஷங்களைப் போக்கி பரமானந்தத்தை உண்டு பண்ணுவதால் தூபம் எனப் பெயர்பெற்றது.

தூபபாத்திரத்தில் சுத்தமான தணலுடன் கூடிய அக்னியை நிரப்பி அதில் சாம்பிராணி முதலிய தூபப்பொருளையிட்டு நிரீக்ஷணம் முதலிய நான்கு சுத்திசெய்து புஷ்பத்தாலருச்சித்து தூபமுத்திரை காட்டி வலதுகையில் எடுத்து இடது கையால் மணியை அடித்துக்கொண்டு, "தூரஸி" என்ற மந்திரத்துடன் ஈச்வரனுடைய நாசியின் சமீபத்தில் காட்டி உயரத்தூக்கி கிரீடம் முதல் பாதம் வரையில் மும்முறை சுற்றிக் கீழே வைத்துவிட்டு நீரால் கரசுத்தி செய்யவும்.

தீபம் :- தீபக்காலில் பசுவின்நெய் உத்தமம் கலப்புநெய் மத்தியமம், எள்எண்ணெ அதமம். இதில் ஏதாவதொன்றுவிட்டு தாமரைநூல் அல்லது பருத்தி நூலால் தீபம் ஏற்றி நான்கு சுத்திகள் செய்து புஷ்பத்தால் அருச்சித்து தீபமுத்திரை காட்டி முன்போல் இடது கையால் மணி அடித்துக்கொண்டு வலது கையால் தீபத்தைத் தூக்கி நேத்திரத்திற்கு எதிராக சமர்ப்பித்து கிரீடம் முதல்பாதம் வரையில் மும்முறை சுற்றிக் கீழேவைத்து கரசுத்தி செய்யவேண்டும்

மஹா தீபம் (அலங்கார தீபம்) :-

11	அடுக்கு	தீபமாயின்	உருத்திரஸ்வரூபமாயும்
9	,,	,,	நவசக்தி ஸ்வரூபமாகவும்
7	,,	,,	சப்தமாத்ரு ஸ்வரூபமாகவும்
5	,,	,,	பஞ்சப்பிரும்மஸ்வரூபமாயும்
3	,,	,,	திருமூர்த்தி ஸ்வரூபமாகவும்
1	,,	,,	சிவஸ்வரூபமாகவும்

பாவித்து தீபத்தில்மேல் ஒரு புஷ்பத்தை வைத்து நான்கு ஸம்ஸ்காரம் செய்து திருசூல முத்திரை காண்பித்து வலது காலை முன்நிறுத்தி இடதுகாலைப் பின்புறம் சமமாக வைத்துக் கொண்டு முகம், கண், மூக்கு, கண்டம், மார்பு கால் என்ற இடங்களில் தனித்தனி மூன்று பிரதக்ஷிணமாகச் சுத்தவேண்டும். இது பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம், என்ற மூன்று உலகங்களையும் கார்ப்பதாகும். — காரணகமம்.

(தொடரும்)

திருவூடல்

திருநெறிச்செம்மல், நல்லிசைப்புலவர்,

வித்துவான். திரு. சா. குருசாமி தேசிகர்.

கணவன் மனைவி இருவர்க்கு மிடையே ஏற்படும் சிறு பிணக்கு ஊடல் எனப்படும். இது அவ்விருவரிடத்தும் வளரும் அன்பிற்குப் பெரிதும் துணைசெய்வது. இதனைத் திருவள்ளுவர் 'ஊடுதல் காமத்திற் கின்பம்' என்று கூறுகிருர். ஊடல் தோன்றுவதற்கு ஆடவர்களே பெரிதும் காரணமாவர். எத்தகைய பெரிய தவற்றையும் பொறுக்கும் இயல்புள்ள மனைவி தன் கணவனது புறத்தொழுக்கைப் பொறுக்க மாட்டாள். அதுவே பெரும்பாலும் அவள் தன் கணவன்மேல் ஊடல் கொள்வதற்குக் காரணமாய் அமைகின்றது.

ஊடல் போக்கும் உபாயங்கள் பல அகப்பொருள் நூல்களில் சொல்லப்பட்டுள்ளன. தவறுசெய்த கணவன், மனைவியின் சினத்தைத் தணித்தற்கு மேற்கொள்ளும் முயற்சிகள் அனைத்தும் சிறிதுநேரம் அவளது சினத்தைத் தணித்தற்குப் பயன்பட்டாலும், அச்சினம் கிளைத்தெழுந்த பின்னரே அடங்குவது இயல்பு. தான் செய்த தவற்றை மனைவி சுட்டிக்காட்டுகின்றபோது கணவன் பணிந்து போதற்குக் கடமைப்பட்டவனுகின்ருன். அப்பொழுது ஆண்மை பெண்மைக்கு அடிபணிதல் தவருகாது என்பது அறிஞர் கருத்து.

> " மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
> நினையுங் காலைப் புலவியுள் உரிய "

என்பது தொல்காப்பியம். மனித வாழ்வில் ஏற்படும் இத்தகைய ஊடலென்னும் இன்ப விளையாட்டை இறை வழிபாட்டிலும் ஏற்படுத்தி இன்பங்கண்டனர் நம்முன்னேர். அதுவே திருவூடல் விழாவாகத் திருக்கோயில்களில் நடைபெறுகிறது.

'திருவூடல் கண்டார்க்கு மறுவூடல் இல்லை' என்னும் பழமொழி, இவ்வூடல்விழாவின் சிறப்பை நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

சிவபெருமானுக்கும், பார்வதிதேவிக்கும் இடையே ஊடல் தோன்றியதாகக் கற்பனை செய்து பாடப்பட்ட இலக்கியப் பாடல்கள் பலவாகும். சிவப்பிரகாச சுவாமிகள் என்ற செந்தமிழ்க் கவிஞர் பெருமான் இறைவனுக்கும், இறைவிக்கும் இடையே நிகழ்ந்த ஊடலை அழகியதொரு சொல்லோவியமாய் வடித்துத் தருகிறார். பார்வதிதேவியை, பூங்கொடி என்று புலவர்கள் கூறுவது எவ்வாறு பொருந்தும் என்ற ஒரு கேள்வியை எழுப்பிக்கொண்டு அதற்கு விடைகூறும் முறையில் சிவப்பிரகாசர், "பார்வதிதேவியின் பாதங்களைத் தன் திருமுடியில் உள்ள கலைக்கொட்டால் உழுது கங்கை நீரைச் சொரிகின்றான் சிவபிரான். அதனால் அவள்முகத்தில் முல்லையரும்புகள் போன்ற பற்கள் முகிழ்க்கின்றன. ஆதலால் உழுது நீர் பாய்ச்ச அரும்புகளைத் தரும் கொடியின்குணம் பார்வதிதேவிக்கும் இருக்கின்றது" என்று கூறும் முறையில் பார்வதிதேவியின் ஊடல்நீக்கப் பரமன் முடிதாழ்த்தி நிற்கிறான் என்பதைச் சிவப்பிரகாசர் கூறுகின்றார்.

"முழுமணி மிடற்றன் கனல்மழு வீரன்
முக்கணன் டகைநின தெழில்கூர்
முகம்புலர் தலைக்கண் டுடல்வளை ந் தடியின்
முனைப்பிறை கோடுகொண் டுழுது
விடுமணி அரவம் நுழைசடா டவியின்
விண்ணதித் தண்புனல் விடுப்ப
விரைவொடு குளிர்ந்து முகமலர் தலினால்
மென்கொடி எனநினை உணர்ந்தேன்"

மீனாட்சியம்மையை ஊஞ்சலில் இருத்தி ஆட்டுகின்ற கலைமகளும், திருமகளும் அம்பிகையினுடைய பாதங்களில் பிறை பதிந்த வடு இருப்பதைக் கண்டு பரிகசிப்பதாகக் குமரகுருபரர் கூறுகிறார்.

"ஒல்கும் கொடிச்சிறு மருங்கிற் கிரங்கிமெல்
ஓதிவண் டார்த்தெழப் பொன்
ஊசலை உதைந்தாடு மளவின்மலர் மகளம்மை
உள்ளடிக் கூன்பிறை தழீஇ

மல்கும் சுவட்டினை வலம்புரிக் கீற்றிதுகொல்
வாணியென் றசதி யாடி
மணிமுறுவல் கோட்ட நின் வணங்கா முடிக்கொரு
வணக்கம் நெடுநாண் வழங்க ”

என்று குமரகுருபரர் கூறுகிறார். இறைவனுக்கும் இறைவிக்கும் ஏற்பட்ட ஊடல் ஒருமுறை இராவணனால் தணிக்கப் பெற்றது என்று தண்டியலங்காரம் கூறுகிறது.

“ அருவியங் குன்றம் அரக்கன் பெயர்ப்ப
வெருவிய வெற்பரையன் பாவை—பெருமான்
அணியாரம் ஆரத் தழுவினாள் தான்முன்
தணியாத ஊடல் தணிந்து ”

இப்படிப்பட்ட செய்யுட்கள் சிவபிரானுக்கும், பார்வதி தேவிக்கும் இடையே ஏற்பட்ட ஊடலை மையமாகக்கொண்டு எழுந்த கற்பனை விருந்துகள். இவ்வூடல்விழா ஒவ்வொரு திருக்கோயிலிலும் சிற்சில வேறுபாடுகளோடு நடைபெறுகிறது. ஆகமங்களிலும் இவ்வூடல்விழா இறைவனுக்குரிய விழாவாகக் குறிக்கப் பெற்றுள்ளது. இதன் நிகழ்ச்சி முறைகளைப் பற்றிய விளக்கங்கள் கோயில்கள்தோறும் சிறிது சிறிது வேறுபட்டு வழங்கப்பட்டு வருகின்றன. பெரிய கோயில்களில் பிரமோற்சவத்தில் ஒருநாள் இவ்வூடல்விழா நிகழ்ச்சி நடத்தப் பெறுகிறது. பிரமோற்சவம் இல்லாத கோயில்களில் நடராசப் பெருமான் எழுந்தருளும் மார்கழித் திருவாதிரையின் போது இந்நிகழ்ச்சியை நடத்துகின்றனர். இறைவனுக்கும், இறைவிக்கும் இடையே ஏற்பட்ட இவ்வூடலைச் சண்டேஸ்வரர் அல்லது சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய இருவரில் ஒருவர் தீர்த்துவைப்பதாக நிகழ்ச்சி அமைகிறது.

திருவூடல்

ஸ்ரீ நடராசப் பெருமான் ஸ்ரீ சிவகாமியம்மையாரோடும் திருவீதி வலம் வந்து திருக்கோயிலுக்குள் எழுந்தருளும் வேளையில் கோயிலின் திருவாயிலில் நடராசப்பெருமானை நிறுத்தி அம்பிகையை மட்டும் கோயிலுக்குள் தனியே எழுந்தருளச் செய்தல் வேண்டும். நடராசப்பெருமான் திருமுன்

சுந்தரமூர்த்தி சுவாமிகளை எழுந்தருளச்செய்து நிறுத்தித் தல ஓதுவாமூர்த்தி ஒருவருக்குப் பட்டுப்பரிவட்டம் கட்டி மரியாதை செய்தபின், அவர் வாயிலாகத் திருவுடலை வாசிக்கச் செய்தல்வேண்டும்.

சுந்தரர் :

துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

அரவகல் அல்குலார்பால் ஆசைநீத்தவர்க்கே வீடு
தருவம் என்றளவில் வேதம் சாற்றிய தலைவன் தன்னைப்
பரவைதன் புலவி தீர்ப்பான் கபூதுகண் படுக்கும் பானாள்
இரவினில் தூதுகொண்டோன் இணையடி முடிமேல்
வைப்பாம் !

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர் அருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி யல்லேன்என லாமே.

சுவாமி :

" நம்மரு ளாலே தோன்றி நாம்ஏவ இங்கு வந்தாய்
இம்மையின் மாய வாழ்வின் இடர்ப்படா துன்னை யாளச்
செம்மையில் நாமே வந்துன் திருமண நந் தடுத்தாட்
கொண்டோம்
மும்மையின் தொண்டன் என்ன மொழிந்தனன்
உனக்கு நாமம். "

வாரும், சுந்தரரே, இன்றையதினம் நம்தேவி சிவகாம சுந்தரியார் நம்மேல் ஊடல்கொண்டு நம்மைக் கோயிலுக்குள் புகாமல் தடுத்துத் திருவுளக்கோபமாக,

" செய்வதென் சிவனே என்று தேவிகண் சிவந்து கொண்டு
கையுள்கனகப் பெட்டி கவரிவெண் குடைகள் பண்டம்
உய்வகை ஆவ தென்ன உறப்பொருள் பறித்துக் கொண்டு
பொய்யிலா அடியா ரோடும் நாயகி கோயில் புக்காள் "

அம்மையாருக்கு நாம் என்ன தாழ்வு பண்ணினேம் ஆபரணங்களில் யாதொரு குறையும் வைக்கவில்லை. ஊடல்கொள்ள யாது காரணமோ தெரியவில்லை. நாம் லோகக்ஷேமார்த்தமாக ரிஷபத்துவஜாரோகணமாய் திருவீதிக்கு எழுந்தருளி தேவேந்திராதிகளுக்கும், பக்த ஜனங்களுக்கும் போகமோட்சங்களைக் கொடுக்கவேண்டியதாய் இருக்கிற உற்சவ மத்தியிலே தேவி ஊடலாயிருக்கலாமோ, நீர்போய் ஊடல் தீர்த்து அழைத்துவாரும்" என்று சுவாமி திருவுளம் பற்றச் சுந்தரர் பணிந்து அம்பிகை சந்நிதிக்கு எழுந்தருளுகின்றார். அப்போது திருச்சின்ன முழக்கம்.

" நம்பியா ரூரன் வந்தான் நாவலூர் நம்பி வந்தான்
உம்பரால் அறிய வொண்ணு உண்மைகள் உரைப்பான் வந்தான்
செம்பொனர் மதில்கள் சூழும் திகழ்செல்வத் திருவா ரூரில்
தம்பிரான் தோழன் வந்தான் என்றன தாரைச் சின்னம் "

அம்பிகை சந்நிதியை அடைந்த சுந்தரர் வலம்வந்து பணிந்துநின்று,

" இருபதமுந் துடியிடையுந் திகழுடையுந் தனதடமு மியல்பொற் பூணுங்
கருவிழியுஞ் செவ்வாயும் வெண்ணகையும் பசுந்தோளும் கழுநீர்க் கையும்
பொருவருமங் கலநாணுங் கந்தரமும் புரிகுழலும் புனிதன் கண்ணுந்
திருவருளு முலாவுமெழிற் சிவகாம சுந்தரிதாள் சென்னி சேர்ப்பாம். "

ஆன்மகோடிகளைப் பெற்ற அன்னையே, தாங்கள் மகாதேவரிடம் கொண்ட கோபம் நீங்கி அவரைத் திருக்கோயிலுக்குள் எழுந்தருளச் செய்யவேண்டுமென்பது அடியேனின் பிரார்த்தனை என்று விண்ணப்பம் செய்ய,

அம்பிகை :

" கழிந்த தீயுடல் ஏந்தியே திரியுமோ காணில்
இழிந்த கேசமும் தரிக்குமோ ஏனத்தின் எயிறு
மொழிந்த கூருமத் தோடுமேற் கொள்ளுமோ உலகம்
அழிந்தி டும்படி உயிர்களை முடிக்குமோ அமலன் "

" புலியின் ஈருரி உடுக்குமோ தந்தியின் புன்தோல்
வலிய தன்புயம் போர்க்குமோ செந்தழல் மழுமான்
இலைகொள் முத்தலை வேற்படை ஏந்துமோ எங்கும்
பலியும் ஏற்குமோ திருத்தமும் செய்யுமோ பகவன். "

வாரும் சுந்தரரே, உம்முடைய கர்த்தரான பரமேசுவரர் இடுகாட்டில் ஆடுவதையும், ஆமைஓடு, பன்றிக்கொம்பு இவற்றை அணிவதையும், புலித்தோல் உடுப்பதையும், தலையோட்டைக் கையில் தாங்கித் திகம்பரராய்ப் பிக்ஷாடனராகத் திரிவதையும் பொறுத்தோம். உம்முடைய கர்த்தரானவர் தாருகாவனம் சென்று ரிஷிபத்தினிகளைக் கண்டு இச்சித்ததையும், எனக்கு எதிரியாக ஒருத்தியைச் சடையிலே வைத்துக்கொண்டு இருப்பதையும் எம்மால் பொறுக்கமுடியவில்லை, அதைக்கண்டு சகியாமல் நாம் அவரோடு ஊடலானோம். இப்படிப்பட்ட நாயகருடன் உறவுகொள்ளவேண்டும் என்று வந்துசொல்லும் நீரும் பெரியவரே! அவரும் பெரியவரே! இத்தகாத செயல்கள் உங்களுக்கே ஏற்றவை. உம் வார்த்தை இங்குச் செல்லாது. அவர் சதி வெல்லாது. நம் உள்ளம் போல்லாது. நீரும் இங்கே நில்லாது யாதொன்றும் சொல்லாது போம்", என்று பாங்கிமார்களைக் கொண்டு தள்ளிவிடும் படி ஆக்ஞாபிக்க, பாங்கிமாரும் அவ்வாறே சுந்தரரைத் தள்ளிவிட்டனர். சுந்தரர் மீண்டும் இறைவனிடம் அச்சத்தோடு வருகின்றார். வலம்வந்து பெருமான் திருமுன்நின்று,

சுந்தரர் :

" பூண்பதோ ரிளவாமை பொருவிடை யொன்றேறி
பொல்லாத வேடங்கொண் டெல்லாருங் காண
பாண்பேசிப் படுதலையிற் பலிகொள்கை தவிரீர்
பாம்பினொடு படர்சடைமேல் மதிவைத்த பண்பீர்

வீண்பேசி மடவார்கை வெள்வளைகள் கொண்டீர்
வெற்பரையன் மடப்பாவை பொறுக்குமோ சொல்வீர்
காண்பிணிய மணிமாடம் நிறைந்தநெடு வீதி
கடனாகைக் காரோணம் மேவியிருந் தீரே. "

" வங்க மலிகட னாகைக்கா ரோணத்தெம் வானவனே
யெங்கள் பெருமானோர் விண்ணப்ப முண்டது கேட்டருளீர்
கங்கை சடையுட் கரந்தாயக் கள்ளத்தை மெள்ளவுமை
நங்கை யறியின் பொல் லாதுகண் டாய்எங்கள் நாயகனே "

" தேவரீர்! ஆலகால விஷத்தை உண்டும், இடபம் ஏறியும் செய்தருளிய திருவிளையாடல்கள் அனைத்தையும் அம்பிகை பொறுத்தார்கள். தம்மைஇடப்பாகத்தில் வைத்துக்கொண்டே கங்கையென்னும் நங்கையைத் தேவரீர் சடையில் மறைத்து வைத்திருப்பதையும் ரிஷிபத்தினிகளை இச்சித்ததையும் அம்பிகை யறிந்து மிகவும் ஊடலாய் இருக்கிறார்கள். தேவரீருக்காகத் தூதுசென்ற எம்மைப் பாங்கிமாரைக்கொண்டு 'உன்வார்த்தை இங்கு செல்லாது' என்று கூறி விரட்டி விட்டார்கள், அடியேனாலே இந்த வூடலைத் தீர்ப்பது மிகவும் சிக்கலாகவுள்ளது. முன்னொரு காலத்தில் அம்பிகையிடம் ஊடல் ஏற்பட்டபோது இராவணனைக்கொண்டு கைலை மலையைப் பெயர்க்கச் செய்து அதனால் அம்மையாருக்கு அச்சமுண்டாக்கி அவர்களே உம்மை வலியத்தழுவிக்கொள்ளும்படி செய்துகொண்ட உபாயத்தைப்போல, தேவரீரே வேறொரு உபாயத்தைப் பண்ணிக்கொள்ள வேண்டும். அடியேனால் இவ்வூடல் தீர்க்க இயலாது.

சுவாமி :

"வாரும் சுந்தரரே! எம்மேல் தேவியார் சொல்லியுள்ள குற்றங்களுக்கெல்லாம் சமாதானம் சொல்லுகிறேன்; கேளும். கங்கையை நாம் சடையில் தாங்கியிராவிட்டால் இந்த உலகனைத்தும் அழிந்துபோய்விடும். பகீரதனுக்காக வந்த கங்கை வெள்ளத்தை நாம் சடையில் தரித்தது உலகைக் காப்பாற்றுவதற்காக அல்லவா? தாருகாவனத்து முனிவர்கள் நம்மை மதியாது தாமே பெரியவர் எனச் செருக்குக் கொண்டு தவநெறி யொழித்துத் தீயவேள்விகள் செய்து

திரிந்தார்கள். அவர்களுக்குப் புத்திபுகட்டவல்லவோ நாம் பிக்ஷாடனராகத் திரிந்தோம். இதையெல்லாம் இன்னொரு தரம் போய் அம்பிகைக்கு எடுத்துச்சொல்லிச் சமாதானம் பண்ணி அழைத்துக்கொண்டு வரவேண்டும்" என்றுசொல்ல, அதன்படி சுந்தரமூர்த்தி சுவாமிகள் அம்பிகை சந்நிதிக்கு எழுந்தருளுகிறார்கள்.

சுந்தரர் :

மகாதேவி! 'தங்கள் நாயகர் செய்தருளிய திருவிளையாடலைப்பற்றிக் கோபிக்காமல் மனமிரங்கிக் கோபந்தணிய வேண்டும். உலகமாதாவாக இருக்கிற தங்கட்கு யார் சொல்ல முடியும். அகிலலோக நாயகரான தங்கள் நாயகரின் திருவிளையாடலை இன்னபடி யென்று ஒருவரால் சொல்ல இயலுமா? தாருகாவன ரிஷிகள் கர்மமே கர்த்தாவென்று பெருமானை இகழ்ந்ததால் அவர்கள்கர்வம் அடக்கப் பெருமான் பிக்ஷாடனராய் எழுந்தருளினர். அவர்கள் செய்த தீய வேள்வியிலிருந்து தோன்றித் தம்மையழிக்கவந்த மான், மழு, புலி, பாம்பு முதலியவற்றை அழித்து அவர்களுக்கு உண்மை ஞானத்தை உணர்த்தினர். ஊழிக்கால வெள்ளம்போல உலகை யழிக்க வந்த கங்கையை, உயிர்களையெல்லாம் காப்பாற்றுவதற்காகவே தம் சடைமுடியில் தரித்தார். இவைகளைக் குற்றமென்று கருதாமல் பெருமானிடம் எழுந்தருளல் வேண்டும்' என்று விண்ணப்பம் செய்த சுந்தரரைப் பார்த்து,

அம்பிகை :

'வாரும் சுந்தரரே! உம்முடைய கர்த்தருக்காக அவர் செய்த குற்றங்களுக்கெல்லாம் சமாதானம் சொல்ல உம்மை மகாதேவர் அனுப்பினர்போலும். உமக்குப் பொன்வேண்டும் போதெல்லாம் கொடுத்தும், வெயிலென்றும் பாராமல் வீடுகள் தோறும் இரந்து வந்து அன்னமிட்டும் ஆதரித்து வந்தவர் அவர். உண்ட வாய் வாழ்த்தவேண்டாமோ? தூர்த்த வியாபாரம் பண்ணுவார்களுடைய பேச்சைப் பேசவேண்டாம். நீர் போகலாம்" என்று அம்பிகை பாங்கிமாரை அனுப்பித் தள்ளிவிடச்சொல்ல, மீண்டும் சுந்தரர் இறைவனிடம் எழுந்தருளுகிறார்.

சுந்தரர் :

" ஒருத்திதன் தலைச்சென் றாளைக் கரந்திட்டா னுலக மேத்த
ஒருத்திக்கு நல்ல னாகி மறுப்படுத் தொளித்து மீண்டே
ஒருத்தியைப் பாகம் வைத்தா னுணர்வினை யையமுண்ணி
ஒருத்திக்கு நல்ல னல்ல னொற்றியூ ருடைய கோவே."

" தேவரீர் ஏது குற்றம் செய்தாலும் என்னுடைய தாயாராகிய பரமேஸ்வரி பொறுத்திருக்க, தேவரீர் கங்கையைச் சடையிலே ஒளித்து வைத்திருக்கிற கள்ளத்தை யறிந்து என்ன சொன்ன போதும் ஆட்சேபணை செய்து தள்ளிவிட்டார்கள். இனிமேல் என்னாலே ஒன்றும் செய்ய இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் " என்று சொன்ன சுந்தரரை நோக்கிச் சுவாமி திருவுள்ளம் பற்றுகிறார்.

சுவாமி :

" வாரும் சுந்தரரே, உனக்கும் பரவையாருக்கும் ஏற்பட்ட ஊடலைத் தீர்க்க ஓர் இராத்திரி எல்லாம் பரவை வீட்டுக்குப் பலமுறை நடந்து சமாதானம் பண்ணினோமே! நீர் எங்களுக்குள் ஏற்பட்ட ஊடலைத் தீர்க்க இயலாது என்றால் உம்மைவிட வேறொரு தோழன் எமக்குண்டோ சொல்லும், தம்பிரான் தோழர் என்று உமக்கே நாம் பெயர் கொடுத்தோம். இந்த ஊடலை நீரே எந்தவிதமும் தீர்க்கவேண்டும்." என்று திருவுளம் பற்றினர். சுந்தரர் மகிழ்ச்சியோடு மூன்றும் தடவையாக அம்பிகை சந்நிதிக்குச் சென்று வலம் வந்து நின்று துதித்துச் சொல்கிறார்.

சுந்தரர் :

" அம்மையே பரமேஸ்வரரிடத்தில் ஒரு குற்றமும் இல்லை. பகீரதன், தம்முன்னோர்களாகிய சகரர்களை உயிர்ப்பிக்க விரும்பினான். கங்கையைப் பூவுலகிற்கு வரவழைத்து அவர்களை உயிர் பெறச் செய்ய வேண்டுமென்று தவம் செய்தான். கங்கை மண்ணுலகை நோக்கி வெள்ளமாகப் பெருக்கெடுத்துவந்தது. பொங்கிவரும் அவ்வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தவில்லையானால் உலகமே யழிந்துவிடும் என்றஞ்சிய பகீரதன் சிவ பெருமானை வேண்டிக்கொண்டான். பெருமான் கங்கை

வெள்ளத்தைப் புல்நுனியில் பனித்துளிபோலத் தமது திருச் சடையிலே ஏற்றருளினுர். இதுதான் உண்மையே தவிர கங்காதேவியை ஆசையாய்ச் சடையிலே ஒளித்தாரில்லே. மேலும் தங்களுக்கே சர்வசுதந்திரமும் கொடுத்துள்ளார். இதைத் தங்களிடம் தெரிவித்து அழைத்துவரும்படி மகா தேவரும் திருவுள்ளம் பற்றுகிருர். தாங்களும் இறைவனும் ஒன்றியிருந்தால்தானே உலகம் போகபோக்கியங்களுடன் வாழமுடியும். ஆதலால் ஊடல் தீர்ந்து எழுந்தருளவேண் டும்,'' என்று வேண்டிக்கொள்ள, அம்பிகையும் கோபம் நீங்கித் திருவுளம் மகிழ்ந்து புன்சிரிப்புடன் சுவாமி சந்நிதிக்கு எழுந்தருளிவந்து பெருமானை வலம்வந்து பணிந்து அருகில் நிற்க, பெருமான் பார்வதிதேவியாரைநோக்கி 'நாம் இருவரும் ஒருபொருள் ஆகையால் நீ கொண்ட கோபம் தணிக' என்று கூற தாண்டவம் ஆடினுர். அம்பிகையும் புன்முறுவல் செய்ய, பெருமான் ஆனந்ததாண்டவம் ஆடினுர். முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணுயிரம் முனிவர்களும் பூமழை பொழிந்து துதித்தனர். கந்தர்வர் சாமகானம் பாடி னர். தும்புருநாரதர் கின்னரர் கிம்புருடர் யாழிசைத்தனர். சித்தர் வித்யாதரர் பல்லாண்டு பாடினர். அம்பிகையைப் பெருமானிருக்கும் இடத்துக்கு அழைத்துவந்து இறைவனுக் கருகிலே நிறுத்தி சுந்தரர் தோத்திரம் செய்தருளுகின்ருர்.

சுந்தரர் :

சூடினுர் கங்கை யாளைச் சூடிய துழனி கேட்டங்
கூடினுள் நங்கையாளும் ஊடலை யொழிக்க வேண்டிப்
பாடினுர் சாம வேதம் பாடிய பாணி யாலே
ஆடினுர் கெடில வேலி அதிகைவீ ரட்ட னுரே.

திருச்சிற்றம்பலம்

சொக்கநாத வெண்பா

பஞ்சமா பாதகனை ஆண்டபுகழ் பார்மீதிற்
கொஞ்சமா வீறுபுகழ் கூறுமே — வஞ்சமே
பூண்டளவில் பாதகஞ்செய் பொல்லாத நாயேனை
ஆண்டளவிற் சொக்கநா தா. 5

— ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக சுவாமிகள்.

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையம்
வேளூர் தேவஸ்தான இறைபணி மன்றத்தின்
17 ஆவது ஆண்டு நிறைவு விழாவில்

தமிழக அரசின் அறநிலைய அமைச்சர்.
மாண்புமிகு. கே. வி. சுப்பையா அவர்கள்

ஆற்றிய

தலைமையுரையின் சுருக்கம்

அமைச்சராவதற்கு முன்பே மடத்தோடு தொடர்புடையவன் நான். சமயத் தொடர்பால் அல்ல; அன்பு காரணத்தால்; தமிழ் வளர்க்குங் காரணத்தால்; தமிழ்ப் பண்பாடு காரணத்தால்; கடவுள் கிடையாது என்பது கழகத்தின் கொள்கை அல்ல. சிலர் தவருகப் பிரசாரம் செய்கிருர்கள். தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்தால் கோயிலை இடிப்பார்கள். குளத்தைத் தூர்ப்பார்கள் என்றெல்லாம் பிரசாரம் செய்தார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு எண்ணிலாக் கோயில்கட்குத் திருப்பணிகள் நடைபெறுகின்றன. கும்பாபிஷேகங்கள் நடந்துவருகின்றன. எங்கட்குக் கடவுள் கொள்கை உண்டு. "ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதைக் கழக சட்டப் புத்தகத்தில் வெளியிட்டிருக்கிறோம். நேருவும் கூட இந்திராவிற்கு எழுதிய கடிதம் ஒன்றில் ஒருவன் பசியால் வாடும்போது கடவுளைப்பற்றி உபதேசிக்காதே. பசியைத் தணித்தபிறகு கடவுளைப்பற்றிப் பேசினல் கேட்பான் என்று எழுதியுள்ளார். ஏசு பெருமான்கூட ரொட்டி உருவத்தில் வருவான் கடவுள் என்று உபதேசித்துள்ளார். ரவீந்திர நாத் தாகூரும் வயலில் வேலைசெய்யும் பாட்டாளிதான் கடவுள் என்று கூறியுள்ளார். இவர்கள்தான் நடமாடும் தெய்வங்கள். கடவுளைத் தேடி அலையாதீர்கள்; அன்று பிறந்த குழந்தையைப் போல் வருவதானல் ஏற்றுக்கொள்கிறேன். சாதி மதம் தெரியாது குழந்தைக்கு, ஏழை பணக்காரன் தெரியாது. வஞ்சகம் சூழ்ச்சி தெரியாது. தூய உள்ளம், அன்பு, அறம், ஒழுக்கம் உள்ளவர்களைக் கடவுள் விரும்புகிருர். பத்து லக்ஷம் சம்பாதித்தவனை வரவேற்கிறோம். பணம் படைக்காத நல்லவர்களை அப்பாவி என்று ஒதுக்கி விடுகிறோம். அறிஞர் அண்ணு அவர்கள் 'ஏழை எளியவர்களின் சிரிப்பிலே இருக்கிருர்

கடவுள்' என்றார்கள். இதுதான் கழகக் கொள்கை, கோயில் கூடாது என்பதல்ல. கட்சி தோன்றிய காலம் தொட்டே இக்கொள்கைகளைக் கழகம் கடைப்பிடித்து வருகிறது.

தமிழக மடாதிபதிகள் எல்லோரும் தெய்விகப் பேரவை அமைத்துள்ளார்கள். இது போன்ற ஒரு சிறந்த அமைப்பின் மூலம் உலகம் முழுவதும் சமயப்பிரசாரம் செய்ய வேண்டும். அதற்கு நாங்கள் ஒத்து உதவுகிறோம். கிறித்தவர்கள் கல்வியை வைத்துத்தான் மதத்தைப் பரப்பியிருக்கின்றார்கள். அவர்களைப் போல்தான் நாமும் கல்வியின்மூலம் மதத்தத்துவங்களை மக்களிடையே புகட்டவேண்டும். மக்கட்கு உரிய தேவைகளைப் பூர்த்திசெய்தால்தான் மக்கட்குப் பக்தி வளரும். இப்பிரசார நிலயம் தமிழையும், பக்தியையும், கடவுள் தத்துவங்களையும், பொது மக்களுக்கு அறிவிக்கும் வகையில் 17 ஆண்டுகளாகச் சிறந்த சேவைசெய்துவந்துள்ளதைப் பாராட்டுகிறேன். தமிழக அரசு மதத்திற்கும், கோயில்களுக்கும் வேண்டிய உதவி ஒத்துழைப்பைச் செய்யும் என்று உறுதி கூறி விடைபெறுகின்றேன்."

குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலிய வற்றை எளிய நடையில் தெளியச் செய்யும் ஆராய்ச்சிவிளக்கத்துடன் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா :- ரூ. 3—00

விலாசம் :— நிர்வாக ஆசிரியர்.

உயர்திருவாளர், T. M. குமரகுருபரன் பிள்ளை
B. A., B. L., அவர்கள்
குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

செய்திகள்

ஆதீனத் திருக்கோயில்களில் பாவை மாநாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்களில் ஆண்டுதோறும் நடைபெறுவது போல இவ்வாண்டும் பாவை மாநாடுகள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் அருளால் சிறப்புற நிகழ்ந்தன. தேவர்களின் விடியற்காலம் என்று கூறப்பெறும். மார்கழி மாதம் முழுவதும் ஆதீனத் திருக்கோயில்களில் திருப்பள்ளியெழுச்சி வழிபாடு உரிய காலத்தில் நடைபெற்றது. அன்பர்கள் பலர் வழிபட்டு இறையருள் பெற்றனர். திருவாதிரை இறுதியாகக் கொண்ட பத்து நாட்களில் திருமுறைகளுக்குத் திருக்காப்பிட்டு வழிபாடு செய்து திருவெம்பாவைப் பாடல்களை வழிபாட்டுக்காலங்களில் பாடுவது மரபு. அந்த நாட்களிலேயே ஆதீனத் திருக்கோயில்களில் இவ்வாண்டு திருவெம்பாவை மாநாடுகள் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. மாநாட்டின்போது திருவெம்பாவைப் பாடல்கள் பண்ணிசையுடன் பாடப்பெற்றன.

சீகாழியில் :

சிகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி திருக்கோயிலில் 1—1—'71 வெள்ளிக்கிழமை மாலை 6 மணி அளவில் திருஞானசம்பந்தர் திருக்கோயிலில் மாநாடு தொடங்கியது. திருவெம்பாவைப் பாடல்கள் ஓதியபின்னர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித்துறைத் துணைப் பேராசிரியர், திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர், வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனார் அவர்கள், "திருவெம்பாவை" என்றபொருள்பற்றியும், மன்னன் பந்தல் அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு அ. கலியபெருமாள் எம்.ஏ. அவர்கள் "திருப்பள்ளியெழுச்சி" என்ற பொருள்பற்றியும் விரிவுரையாற்றினார்கள். அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

திருபுவனத்தில் :

திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 3—1—'71 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்குப் பின்னர்

நிகழ்ந்த மாநாட்டில், திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், சைவப்புலவர், சிவநெறிவித்தகர், வித்துவான். திரு. மு. சுந்தரேசம்பிள்ளை அவர்கள் "மார்கழி நீராடல்" என்ற தலைப்பிலும், திருவையாறு, பண்டித வித்துவன், தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள் "திருப்பள்ளியெழுச்சி" என்ற தலைப்பிலும் பேருரையாற்றினார்கள். தொடக்கத்திலும் நிறைவிலும் திருவெம்பாவைப் பாடல்கள் பாடப்பெற்றன. அன்பர்கள் கேட்டுப் பயன்பெற்றனர்.

திருக்குவளையில் :

திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் 3—1—'71 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி அளவில் தொடங்கப் பெற்ற பாவை மாநாட்டில் "அவள்சுரக்கும் அருள்" என்ற தலைப்பில் திருவாரூர் வித்துவான். திரு. மு. இரத்தின தேசிகர் அவர்களும், "திருப்பள்ளியெழுச்சி" என்ற தலைப்பில், திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், வித்துவான். திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்களும் விளக்கவுரையாற்றினார்கள். அன்பர்கள் பலர் கேட்டு உய்ந்தனர்.

வேளூரில் :

வேளூர் (வைத்தீஸ்வரன்கோயில்) ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 5—1—'71 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணி அளவில் திருவெம்பாவைப் பாடல்களின் பண்ணிசைப் பாராயணத்தோடு மாநாடு தொடங்கியது. தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர்கள், தருமையாதீனப்புலவர், சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான், திரு. சி அருணைவடிவேல்முதலியார் அவர்களும், புலவர், திரு. இரா. செல்வக்கணபதி அவர்களும் முறையே "திருவெம்பாவை" "திருப்பள்ளியெழுச்சி" என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர். அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

திருப்பனந்தாளில் :

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் பாவை மாநாடு 5—1—'71 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்குத் தொடங்கியது. திருவெம்பாவைப் பாடல்கள்

பண்ணிசையுடன் பாடப்பட்டன. நாகப்பட்டினம் தேசிய உயர் பள்ளித் தமிழாசிரியர், தருமையாதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான். திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்கள் "எங்கெழிலென் ஞாயிறு" என்ற பொருளிலும், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர், திருநெறிச்செம்மல், நல்லிசைப் புலவர், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் "திருப்பள்ளியெழுச்சி" என்ற பொருளிலும் விரிவுரையாற்றினார்கள். அன்பர்கள் பலர் வந்து கேட்டுப் பயன்பெற்றனர்.

மாயூரம் - வள்ளலார்கோயில் :

மாயூரம் - வள்ளலார்கோயில் ஸ்ரீ வதான்யேசுவரசுவாமி திருக்கோயிலில் 7—1—'71 வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் பாவை மாநாடு தொடங்கியது. திருவெம்பாவைப் பாடல்கள் பண்ணிசையுடன் பாடப்பெற்றன. மாயூரம் மன்னன்பந்தல் அ. வ. அ. கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர், திரு. தி. வ. காந்திமதிநாதன் பி. ஏ., (ஆனர்சு) அவர்களும், தமிழ் விரிவுரையாளர், செஞ்சொற்கொண்டல், வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., அவர்களும் முறையே "மார்கழி நோன்பு"; "பாவைப் பாடல்கள்" என்ற தலைப்புக்களில் சொன்மழை பொழிந்தனர். அன்பர்கள் பலர் வந்து கேட்டு உய்ந்தனர்.

திருக்கடவூரில் :

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 8—1—'71 வெள்ளிக்கிழமை மாலை 6 மணி அளவில் மாநாடு தொடங்கியது. "பாவைப்பாடல்கள்". "திருப்பள்ளியெழுச்சி" என்ற தலைப்புக்களில், மாயூரம் மன்னன்பந்தல் அ. வ. அ. கல்லூரிப் பேராசிரியர். திரு. தி. வ. காந்திமதிநாதன் பி. ஏ., (ஆனர்சு) அவர்களும், செஞ்சொற்கொண்டல், வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., அவர்களும் சொற்பொழிவு ஆற்றினர். தொடக்கத்திலும் நிறைவிலும் திருவெம்பாவைப் பாடல்கள் பண்ணிசையுடன் பாடப்பட்டன. அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

திருவெம்பாவைச் சொற்பொழிவுகள்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான கருங்குயில்நாதன்பேட்டை ஸ்ரீ சக்திபுரீசுவரசுவாமி திருக்கோயிலிலும், மணக்குடி ஸ்ரீ சுந்தரேசுவரசுவாமி திருக்கோயிலிலும் 25—12—70 வெள்ளிக்கிழமை மாலை 6 மணி அளவில் முறையே வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் "மார்கழி

நீராடல்'' என்ற தலைப்பிலும், வித்துவான். சிரோமணி. திரு. வி. சபேசன் ''திருவெம்பாவை'' என்ற தலைப்பிலும் சொற் பொழிவாற்றினர்.

28—12—'70 திங்கட்கிழமை மாலை 6 மணி அளவில் திருமுல்லைவாயில் ஸ்ரீ முல்லைவனநாதசுவாமி திருக்கோயிலில் வித்துவான். சிரோமணி. திரு. வி. சபேசன் அவர்கள் ''பாவை நோன்பு'' என்ற பொருளிலும். ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத் தியாகராஜசுவாமி திருக்கோயிலில், புலவர். திரு. இரா. செல்வக் கணபதி அவர்கள் ''திருவெம்பாவை'' என்ற பொருளிலும், பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி திருக்கோயிலில் மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் ''மார்கழி நீராடல்'' என்ற பொருளிலும், மாயூரம் ஸ்ரீ காசி விசுவநாத சுவாமி. திருக்கோயிலில், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் ''எங்கெழிலென் ஞாயிறு'' என்ற பொருளி லும் சொற்பொழிவாற்றினர்.

31—12—'70 வியாழக்கிழமை மாலை 5 மணி அளவில் தலைஞாயிறு ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவரசுவாமி திருக்கோயிலில் திரு வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் ''பாவை நோன்பு'' என்ற பொருள்பற்றியும், திருநின்றியூர் ஸ்ரீ லக்ஷ்மிபுரீசுவர சுவாமி திருக்கோயிலில் திரு. இரா. செல்வக்கணபதி அவர்கள் ''பாவை நோன்பு'' என்ற பொருள்பற்றியும் சொற்பெருக்காற் றினர்.

1—1—'71 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிமுதல் பறியலூர் ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி திருக்கோயில் புலவர். திரு. இரா. செல்வக்கணபதி அவர்கள் ''திருவெம்பாவை'' என்ற தலைப் பிலும், விளநகர் ஸ்ரீ துறைகாட்டும்வள்ளலார்சுவாமி திருக்கோ யிலில் வித்துவான். சிரோமணி. திரு. வி. சபேசன் அவர்கள் ''பாவை நோன்பு'' என்ற தலைப்பிலும், கொறுக்கை ஸ்ரீ வீரட் டேசுவரசுவாமி திருக்கோயிலில் வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் ''திருவெம்பாவை'' என்ற தலைப்பி லும் சொற்பொழிவாற்றினர்.

4—1—'71 திங்கட்கிழமை மாலை 6 மணி முதல் குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி திருக்கோயிலில் செஞ்சொற்கொண் டல், வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., அவர்கள் ''திருவாசகத்தேன்'' என்ற தலைப்பில் சொற்பெருக்காற்றினார் கள். தொடக்கத்திலும், நிறைவிலும் திருவெம்பாவைப் பாடல் கள் பண்ணிசையுடன் பாடப்பட்டன. ஆங்காங்கும் அன்பர்கள் பலர் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

எதிர்காலம்

திரு. K. முத்துஜோதிடர்

(சாதாரணஞு தைமீ 1வ முதல் 30வ முடிய)
(14—1—71 முதல் 12—2—71 முடிய)

சாதாரண வருஷம் தைமீ முதல் தேதி குருவாரம் உதயாதி 16 நாழிகை 47 விநுடிக்கு மேஷ லக்னத்தில் சனிகால ஹோரையில் ஸ்ரீ லோகரக்ஷகரான சூரியபகவான் உத்தராயண மகர சங்கிரமண பிரவேசம் செய்கிருர். மகரசங்கிராந்தி புண்ணிய கால பிரவேச பலத்தால் உலக மக்கள் - பொங்கல் பண்டிகையை சந்தோஷத்துடன் கொண்டாடி ஸ்ரீ சூரியபகவானுக்கு பூஜா நிவேதனங்களுடன் பிரார்த்தனை செய்துகொண்டு உலகம் சுபிக்ஷகரத்துடனும், தனதான்ய சமிருத்தியுடனும் எல்லோரும் சுகவாழ்வு நடத்திவர ஸ்ரீ சூரியபகவான் அருள்புரிவாராக.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபபலனைத்தரும். தனதான்ய ஸமிருத்தியும் ஜீவன விருத்தியும் ஏற்படும். உலகில் பிரதானமாக இருக்கும் தன்மையை உண்டுபண்ணும். ஆரோக்கியம் உண்டாகும். கிரய விக்ரயம் அதிகமாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும்.. வரவு, செலவு சமமாக இருந்து கொண்டு இருக்கும். ஜீவனம் விருத்தியாகும். புத்திராதிகளால் நன்மை உண்டாகும். ஆரோக்யம் உண்டுபண்ணும். அடிக்கடி பிரயாணங்கள் ஏற்படும். சனி, ஞாயிறு சுபமாகும்.

3. மிதுனம் – மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபபலனைத் தரும். நஷ்டமான பொருள் வந்துசேரும். வியவகாரம் ஜெயிக்கும்.

தொல்லைகள் நீங்கும். குடும்பம், தொழில், ஓங்கும். ஆரோக்யம் உண்டுபண்ணும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் $\frac{1}{4}$ – பூசம் – ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் சுப பலனைத்தரும். தனதான்ய விருத்தி ஏற்படும். குடும்பத்தில் விவாகம் முதலிய சுபகாரியங்கள் ஏற்படும். உறவினர்களாலும், சிநேகிதர்களாலும் நன்மை உண்டாகும். தெய்வபலம் முன்னின்று காக்கும். ஜீவனம் ஓங்கும். புதன், வியாழன் சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் $\frac{1}{4}$.

சிம்மராசி 9 பாதங்களும் சுப பலனைத்தரும். இடம் மாறுதல்களுடன் தொழில் ஓங்கும். குடும்பம் ஓங்கும். மேலோர் பெரியோர்களின் அன்பினால் எல்லாம் சுபமாகச் சாதிக்க முடியும். ஆரோக்யம் தரும். புதிதான முயற்சியால் கூட்டுத்தொழில்கள் ஏற்படும். வெள்ளி, சனி சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் $\frac{3}{4}$ – ஹஸ்தம் – சித்திரை $\frac{1}{2}$.

கன்னியாராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தைத்தரும். ஆரோக்யம் உண்டுபண்ணும். எதிர்பாராமல் நஷ்டமான பொருள்கள் வந்து சேரும். தனதான்யம் விருத்தியாகும். புதிதான முறையில் சிநேகிதர்கள் மூலமாயும், கீழ் வார்சுகள் மூலமாயும் எல்லாக் காரியங்களும் சுலபமாகச் சாதிக்க முடியும். தெய்வபலம் முன்னின்று காக்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

7, துலாம் – சித்திரை $\frac{1}{2}$ – சுவாதி – விசாகம் $\frac{3}{4}$

துலாராசி 9 பாதங்களும் பூர்ணமாகச் சுபத்தைத்தரும். ஆரோக்யம் உண்டுபண்ணும், ஜீவன விருத்தி ஏற்படும். விசேஷமான முறையில் தானதர்ம பிரதிஷ்டா பலன்களும், யாகயக்ஞ பலன்களும், உலக பிரசித்தியும் உண்டுபண்ணும். செவ்வாய், புதன் சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் $\frac{1}{4}$ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும், பூர்ணமாகச் சுபத்தைத்தரும். தனதான்ய விருத்தியும், ஜீவன விருத்தியும், தெய்வ பக்தியும் ஓங்கும். எல்லா உறவினர்களாலும், சிநேகிதர்களாலும் நன்மை

உண்டாகும். ஆரோக்யம் தரும். குடும்பம் ஓங்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼.

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். ஜீவனம் விருத்தியாகும். வரவு, செலவு சமமாக இருக்கும். கொஞ்சம் சரீரத்தில் வியாதியும், வைத்தியச் செலவும் ஏற்படும். தேய்வ பலம் முன்னின்று காக்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

10. மகரம்– உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும், பூர்ணமாக சுபத்தைத்தரும். அடிக்கடி பிரயாணங்கள் ஏற்பட்டுக்கொண்டு இருக்கும். உத்தி யோகத்தில் உயர்பதவி கிடைக்கும். குடும்பம் ஓங்கும். மேலோர் பெரியோர்களினால் நன்மையும், தெய்வபலமும் உண்டாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾,

கும்பராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தைத் தரும். இடம் மாறுதல் ஏற்படும். வியாதி நிவர்த்தியாகி ஆரோக்யம் உண்டுபண்ணும். நஷ்டமான பொருள் வந்துசேரும். தெய்வ பத்தியும், பெரியோர்களின் ஆசியும் ஏற்படும். இல்லறசுகமும் புத்திராதிகளால் நன்மையும் உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் சுபமாகவே இருக்கும். அடிக்கடி பிரயாணங்கள் ஏற்படும். ஜீவனம் ஓங்கும், ஆரோக்யம் தரும். புதிதாக ஆடை ஆபரணங்களும், தனதான்யங்களும் சேரும். இல்லற சுகம் அதிகமாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

குறிப்பு:- ஷை தைமாதத்தில் சூரியபகவான் மகர ராசி பிரவேசத்தை மேஷ லக்கினத்திலும், சனி சம்மந்தத்துடனும், செவ்வாய் துலாத்திலிருந்து ஏழாம் பார்வையுடனும், சனி கால ஹோரையிலும், பிரவேசம் செய்வதாலும் (சனி) சூரியன் மேஷத்தில் பிரவேச காலத்தில் செவ்வாயால் பார்க்கப்பட்டதாலும், தனதான்ய விருத்தி ஏராளமாய்க் கொடுத்து உலகில் அமைதி பங்கத்தையும், மானுஷ்யாள் எல்லோருக்கும் தானே தான் தைவம் என்கிற புத்தியோடும், உலகில் பல மாறுதல்களையும்,

அநேகவிதமான உத்பாதங்களேயும், அற்புதங்களேயும் உண்டு பண்ணி பலவிதமான ஈதிபாதைகளால் சிரமத்தைக்காட்டுமாகையால் லோகக்ஷேமத்துக்கும், சுபிக்ஷத்துக்கும் ஆஸ்திக தர்மம் நிலைப்பதற்கும் பாடுபடக்கூடிய பெரியோர்களின் தெய்வ பலத்தால் சகலமும் நன்மையாகி உலகம் சந்தோஷகரத்தோடு சுபத்தையும், நன்மையையும். அடையச்செய்யும்.

சென்னே, தருமையாதீன மடாலய தேவாலய
சமயப் பிரசார நிலையத்தில்

பதினேழாவது ஆண்டு நிறைவு விழா

சென்னேத் தியாகராய நகரில் உள்ள தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில் பதினேழாவது ஆண்டு நிறைவு விழா 31—12—70 மாலே வேளூர் தேவஸ்தான இறைபணிமன்றத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. விழாவை முன்னிட்டு இறைபணி மன்றம் வண்ணத்தாள்களாலும், தோரணங்களாலும், மின்விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. விழாவிற்குத் தமிழக அரசின் அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு. கே. வி. சுப்பையா அவர்கள் தலேமை வகித்து அறவுரை வழங்கினர்கள். சிலம்புச்செல்வர், திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் ஆண்டு விழாப் பேருரை நிகழ்த்தினர்கள். தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை நிகழ்த்தினர்கள். நிகழ்த்தும்போது நிலேயம் 17 ஆண்டுகளாகச் செய்துள்ள பணிகளே விளக்கினர்கள். தமிழ்வித்துவான் வகுப்பு மாலே நேரங்களில் நடத்தி இதுவரை 50 வித்துவான்களே உருவாக்கியிருக்கிறது. மாலேநேரத் தேவார வகுப்பின் மூலம் 15 க்கு மேற்பட்ட தேவார இசைமணிகளே உருவாக்கியுள்ளது. ஆதீனக் கோயில்களின் முக்கிய விழாக்களின் பிரசாதங்கள் சென்னே மக்கட்குக் கிடைக்கச்செய்வதன் மூலம் பக்தியை வளர்க்கிறது. மாத வழிபாட்டின் மூலம் யாத்திரை உணர்வைப் பெருக்குகிறது. பக்திப் பண்பாட்டை வளர்க்கிறது. திருவாரூர் ஸ்ரீ அப்பர் கோயில், திருமாகறல், குரங்கணில்முட்டம், குரக்குக்கா, பாகசாலே, பெண்ணுகடம் ஸ்ரீ மெய்கண்டார் கோயில் முதலிய திருக்கோயில்கள், ஆசாரியர்களின் கோயில்களின் திருப்பணியில் பெரும் பங்குகொண்டு பணிசெய்து பக்திப் பண்பாட்டை வளர்த்துள்ளது என்று குறிப்பிட்டார்கள். நிலேயத் திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு. எஸ். ஞானப்பிரகாசமும், வித்துவான். திரு, ந. இராமலிங்கமும் முதலில் கடவுள் வணக்கமும், நிறைவில் கடவுள் வாழ்த்தும் பாடி மகிழ்வித்தனர்.

STUDIES IN SAIVA SIDDHANTA

[Part II]

By Thiru J. M. Nallasvami Pillai, B. A., B. L.

(Continued from 10—12—70, Page 4)

Nakkirar is a very ancient author said to belong to the last Sangham or College of Pandits in Madura and he has,

"Lo! my Lord of Kailasa, which soars high above all, without any other higher than itself, is present in all, like the meaning in the word, and the soul in the body, *and the fragrance in the flower*".

We will weave into this growing wreath one more flower culled from the garden (Sivabhoga-saram) of the founder of the Dharmapura Mutt, inasmuch as it illustrates the meaning of 'Advaita' clearly.

"The *advaita* relation of God and the perfected Soul in Mukti is like the advaita relation existing always between fire and wood, heat and water, sweetness and honey, *fragrance and flower*, akas and wind".

Mightily diffident as we are of achieving any thing without the Grace (Arul அருள்) of the Most High, and without the spirits of the sanctified filling our inmost soul, we have helped ourselves to these holy flowers of His Bhaktas, to make a wreath and lay at the fragrant Lotus-Feet of Him, Who has never been known to forsake His devotees and pray to Him in all love and in all humility, to crown our humble efforts with success.

THE LIGHT OF TRUTH

or

UNMAI VILAKKAM

of

TIRUVADIGAI MANAVASAGAM KADANDAR.

This short treatise consisting of 54 Stanzas is one of the Fourteen Siddhanta Sastras, and its author is said to be Tiruvadigai Manavasagam Kadandar, one of the 49 disciples of St. Meykandan. That he was a native of Tiruvadigai and a pupil of St. Meykandan is certain, but there are no other particulars available about his life-history. That he must have been an advanced sage is evident from the name (காரணப்பெயர்) he bears, which means "he who has passed beyond thought and speech."

The author tries to expound in these few pages, the truth of the Sacred Agamas, without going into argumentation, just so much as is sufficient for the aspirant after spiritual Truth, to bring the teaching into actual daily practice. They are in the form of questions addressed to the Teacher St. Meykandan and answers elicited from him. The later part of the treatise explains the truth of the Panchakshara and Sri Nataraja Symbols. We hope the book will be of use to many.

1. வண்மைதரு மாகமநூல் வைத்தபொருள் வழுவா
வுண்மை விளக்கமுறை செய்யத்—திண்மதஞ்சேர்
அந்திநிறத் தந்திமுகத் தொந்திவயிற்றைறங்கரனைப்
பந்தமறப் புந்தியுள் வைப்பாம்,

We place Him, in our heart, the Five-armed God in strong rut, of russet colour, tusked mouth and pot-belley; so that we may be freed of our ignorance and be enabled without fault to spread the Light of Truth, to be gathered from the Sacred Agamas.

2. பொய்காட்டிப் பொய்யகற்றிப் போதாநந் தப்பொருளா
மெய்காட்டு மெய்கண்டாய் விண்ணப்பம்-பொய்காட்டா
மெய்யா திருவெண்ணை வித்தகா சுத்தவினு
வைய்யா நீதான் கேட்டருள்.

O Thou, my teacher, that, perceiving the truth, showdst the truth of Supreme Knowledge and Bliss after removing the falsehood, by proving it to be false !

O Thou, Truth, that, will not give out false-hood
O Thou, that residest in Tiruvennainallur,
Here, O Thou, my humble petition, and deign to
answer my queries !

3. O. my Teacher, explain to me the following !
What are the 36 tatvas ? What is Anava ?
What is that Karma which arose even then ?
What am I who seem to differ from these ?
Who art Thou ? What is the Lord's Sacred Dance
and what is the truth of the Panchakshara ?

4. O my son, who is immersed in Bliss-ful Yoga, hear what I am now imparting to you in accordance with the teachings of the Supreme Agamas, graciously uttered of yore, by the Supreme Siva.

5. The earth's form of a crescent. The fire is of the form of a triangle always. The air is a

six sided-figure. The Akas is a circle. And the soul gets a body formed of these.

6. The colour of these is golden, white, red, black, smoky-coloured, respectively and their letters are ல, வ, ர, ய, ஹ.

7. Their symbols are diamond-sword, the lotus-flower, *svastika*, the six spots, and *Amrita-bindu* respectively. So the old Agamas declare, O my Son.

8. The Gods for the elements Earth etc., are Brahma, Vishnu, Rudra, Mahesvara and Sadasiva; and their functions are respectively Creation, Sustentation, Regeneration, giving Rest, The third and the four the functions are respectly Absorption and Obescuration : Ed.

9. Brahma ereates; The lotus-eyed Vishnu protects; Rudra destroys, and Isa gives them rest; and Sadasiva shows grace always.

10. The Earth is hard, water cool, and fire hot air flows hither and thither, and Akas gives room to all.

11. We have now set forth the number and quality of the elements. If we are to tell you about the five deceitful Perceptions, they are the desire-producing Sound, Touch, Sight, Taste and Smell.

12. Hear the enumeration of the *Jnanendriyas !* Know them to be the ear, the skin, the eye, the tongue and the nose, which perceive the low sensations in this low world.